என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்

லண்டனில்
தரமான
பொருள்கள்
நிரு

June- July 2018

FREE ISSUE


# லண்டன் தமிழர் தகவல்

## London Tamil's Information




மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest



லண்டனில் அதிக
காய்கறி வகைகளை
இறக்குமதி செய்து
விற்பனை செய்பவர்கள்
வாணி
MILD
CURRY POWDER
லண்டனில் முதல்தர காய்கறி இறக்குமதி
மொத்த விற்பனையாளர்கள்
Vaani Foods
தொலைபேசி இலக்கம் 0208 668 7648
VAANI FOODS



BRINGING GREAT FOOD TO LIFE...
Niru BRAND
Nelli
ORANGE SODA
Quento
Crab Curry
Mackerel Curry
NO 1 Brand
BRAND Niru
Quality you can taste
Niru Europe Ltd,Unit11,Mitcham Industrial Estate, 85 Streatham Road,Mitcham,Surrey CR42AP.
T: 020 8640 8228 F: 020 8640 8423 E:sales@niru.co.uk W: www.niru.co.uk



# தமிழர் தகவல்
## Tamil Information

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல் - குறள்

திருவள்ளுவர் ஆண்டு 2049


மலர் : 17
இதழ் : 177
**ஜீன்-ஜீலை - 2018**



முகவரி :
41, HADDINGTON ROAD
BROMLEY
KENT BR1 5RG, U.K.
Email : jothy5@yahoo.co.uk

வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
லண்டன்
Thirumurugan Arivagam
London

**கணக்கு எண் : 29513668**
**வங்கி இலக்கம் : 77 91 29**
**வங்கி :** Lloyds TSB

ஆசிரியர் : அரவிந்தன்
Editor : Aravindan

வடிவமைப்பு :
**தமிழ் அலை**
Layout :
Tamil Alai, tamilalai@gmail.com

படைப்புகள் யாவும்
ஆக்கியோரின் உரிமைகளே

4000 பிரதிகள்


தமிழர்களே! தமிழர்களுடன்
தமிழில் பேசுங்கள்!!


UNLEASH
THE POWER OF GOLD
THARANI



JEWELLERY & PAWNBROKERS
UK'S CHEAPEST GOLD LOANS
STARTING FROM 2.95% PER MONTH

GOLD
LOANS

THE CHEAPEST GOLD
LOAN PROVIDEDR IN WEMBLEY

* NO Need to Sell Your Valuable Jewellery, When You can Get Quick Loan and Easy Terms.
* Use Your Idle Jewellery for Productive Purpose by Availing Our Loans.
* Loans Against Gold from 2.95% per Month, it's U.K's lowest Rate for Gold Loans.
* Cheaper than Unauthorised Overdrafts from High Street Banks.
* No Credit Check Required
* Simple Procedure. Loan sanctioned in Just 5 Minutes.

Our Rates of Interest

£100 to £4999 2.95 % Per Month
APR 38.7%

Loan Term: Up to 6 Months
Documents Required
Photo ID - Passport or UK Driving Licence
Proof of Address - Any Utility Bill or Bank Statement not Older than 3 Months

Terms and Conditions

The maximum loan term is for 6 months. If loan cannot be repaid during this period, a renewable can be made, after interest on the loan is paid in full.

If you have borrowed £75 or less, and if you redeem the loan in 6 months time,we will keep the pledged Gold. If you have borrowed more than £75 we are entitled to sell your pledge to cover the outstandings. The pledge


வாசகர்களே! எமது விளம்பரதாரர்களை மனமுவந்து ஆதரியுங்கள்!

# Lyca TV

# உலகின் மிகப் பிரமாண்டமான தொலைக்காட்சி நிலையம்

ஒருவருட இணைப்புச் சந்தா

**£69**

SET TOP BOX INCLUDED

புதுப்பித்தல்

**£49**

14 மாதங்கள்



LycaTV App ஐ Download செய்து பார்வையிடலாம்

ஒரு மாதச் சந்தா **£4.99** மட்டுமே

Google play · App Store · tv · Roku · AirPlay · chromecast · Samsung SMART TV · LG Smart TV · androidtv · amazon fireTV · kindle fire · XBOX

50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்

விஜய் · ZEE தமிழ் · KTV · Lyca Classic

7000க்கும் அதிகமான TAMIL & HINDI திரைப்படங்கள்



## SUBSCRIBE NOW!

## 0207 132 2727

FULL TERMS AND CONDITIONS ARE AVAILABLE AT WWW.LYCATV.TV. LYCATV IS A TRADEMARK AND SERVICE MARK BELONGING TO LYCAMEDIA LTD. ANY PRODUCT OR SERVICE OR TRADE NAME OTHER THAN THOSE OWNED BY LYCAMEDIA LTD, THAT IDENTIFY A THIRD PARTY AS THE SOURCE, THEREOF MAY (EVEN IF NOT SO INDICATED) BE THE SERVICE OR TRADEMARK OF THAT RESPECTIVE ENTITY OR INDIVIDUAL. ANY UNAUTHORIZED USE OF THE LYCATV MARK IS STRICTLY PROHIBITED.

www.lycatv.tv

# ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம்
# SHRI KANAGA THURKKAI AMMAN TEMPLE

5 Chapel Road, West Ealing, London W13 9AE. Tel: 0208 810 0835 Fax: 0208 840 0485,
Email: info@ammanealing.org, web: www.ammanealing.org

## இரதோற்சவ அருட்காட்சி (தேர்)–2018
## CHARIOT FESTIVAL - 2018



**கொடியேற்றம்**

20-07-2018 வெள்ளி
காலை 9.30 மணி

**இரதோற்சவ அருட்காட்சி**
**(தேர்)**

12-08-2018 ஞாயிறு
காலை 10.00 மணி

ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் (இந்து) ஆலய அறக்கட்டளை

**SHRI KANAGA THURKKAI AMMAN TEMPLE**

5 Chapel Road, West Ealing, London W13 9AE Telephone No.: 0208 810 0835 Fax: 0208 840 0485,
Email: info@ammanealing.org web: www.ammanealing.org

## கோவிலின் செலவுகள் தவிர்ந்த வருமானத்தில் 1/3 பகுதி ஈழத்தில் அவதியுறும் மக்களைப் பராமரிப்பதற்கென பயன்படுத்தப்படுகிறது

1. அம்மன் மகளிர் இல்லம் – அம்பாறை
2. அன்பகம் – வவுனியா
3. பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையம் – வவுனியா
4. Christ Hall Boys Home - ஊர்காவற்துறை
5. இந்து வித்தியா அபிவிருத்திச் சங்கம் – திருநெல்வேலி
6. மகாதேவா ஆச்சிரம சைவச்சிறுவர் இல்லம் – கிளிநொச்சி
7. சமூக நலன்புரி அமைப்பு (SWO) – களுவாஞ்சிகுடி
8. மலையக சிறுவர் இல்லம் – பதுளை
9. ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி இல்லம் – வவுனியா
10. திருக்கேதீஸ்வரன் சிவன் அருள் இல்லம் – மன்னார்
11. கன்னியர் மடம் பெண்கள் சிறுவர் இல்லம் – கிளிநொச்சி
12. விபுலானந்தர் இல்லம் – மட்டக்களப்பு
13. விபுலானந்தர் சிறுவர் இல்லம் – அக்கரைப்பற்று

மேற்குறிப்பிட்ட இல்லங்களில் உங்கள் பேருதவியினால் 500 பிள்ளைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றார்கள். ஏராளமான வேண்டுதல்கள் இல்லங்களில் இருந்து வந்த வண்ணம் உள்ளன. அம்பிகை அடியார்களாகிய நீங்கள் முன்வந்து இன்னும் இப்பணிக்கு உதவவேண்டுமென வினயமாக வேண்டி நிற்கின்றோம். கடந்த ஆண்டில் 'காக்கும் கரங்கள்' திட்டத்திற்கு **£69, 751.00** பவுண்கள் அனுப்பப்பட்டுள்ளன. ஆலயம் தொடங்கிய காலத்தில் இருந்து இதுவரை எமது ஆலயத்தினால் தாயகப்பணிக்கு **£2,485,610.00** பவுண்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.











**ஆதரவற்ற பிள்ளைகளை என்றும் அரவணைப்போம்! அவர்களுக்கு வாழ வழிகாட்டுவோம்!**
**அவர்களுக்குப் படிப்பறிவித்து, இருளகற்றுவோம். அவர்களுக்கு கலங்கரை விளக்காக அமைவோம்.!**
**அவர்களை உயர்த்தும் ஏணிப்படியாக எங்களை அர்ப்பணிப்போம்!**

Design & Printed by: RS Printers Ltd 07765 224 337 / 020 8782 3844





# ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம்

5 Chapel Road, West Ealing, London W13 9AE
தொலைபேசி இல: 0208 810 0835 தொலைநகல் இல: 0208 840 0485, Email: info@ammanealing.org web: www.ammanealing.org

## மகோற்சவ விஞ்ஞாபனம் 2018

அம்பிகை அடியார்களே,

சொல்லும் பொருளும் என, நடமாடும் துணைவருடன
புல்லும் பரிமளப் பூங்கொடியே. நின் புதுமலர்த் தாள்
அல்லும் பகலும் தொழுமவர்க்கே அழியா அரசும்
செல்லும் தவநெறியும், சிவலோகமும் சித்திக்குமே. - அபிராமி அந்தாதி

இலண்டன் மாநகரில் ஈலிங் பதியில் கோவில் கொண்டு அகிலமெல்லாம் அருளாட்சி செய்யும் அன்னை ஸ்ரீ கனகதுர்க்கை அம்மனின் வருடாந்த மகோற்சவ விழா மங்களகரமான விளம்பி வருடம் ஆடி மாதம் 3ம் நாள் 19-07-2018 வியாழக்கிழமை மாலை கணபதி ஹோமத்துடன் ஆரம்பித்து, ஆடி மாதம் 04ம் நாள் வெள்ளிக்கிழமை (20-07-2018) காலை 9.30 மணிக்கு கொடியேற்றமும், 12-08-2018 ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், 13-08-2018 திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும், 15-08-2018 இரவு வைரவர் மடையுடன் நிறைவு பெற திருவருள் கூடியுள்ளது. அக்காலங்களில் அடியார்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக வருகை தந்து கிரியைகளில் பங்குகொண்டு, தொண்டுகள் புரிந்து அம்பிகையின் அருள் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

### 20-07-2018 முதல் 13-08-2018 வரை பூசை நேரம்



| | | | | | |
|---|---|---|---|---|---|
| காலை | 08:00 | சங்கல்பம் | மாலை | 05:15 | சாயரட்சைப் பூசை |
| காலை | 08:15 | அபிஷேகம் | மாலை | 05:45 | ஸ்தம்ப பூசை |
| காலை | 10:45 | ஸ்தம்ப பூசை | மாலை | 06:15 | கலாசார நிகழ்வு |
| காலை | 11:30 | வசந்தமண்டப பூசை | இரவு | 07:00 | வசந்தமண்டபப் பூசை |
| பகல் | 12:45 | மகா பிரசாதம் | இரவு | 10:30 | அர்த்தசாம பூசை |



### மகோற்சவ நிகழ்வுகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 20/07/2018 | வெள்ளி | கொடியேற்ற அருட்காட்சி காலை 9.30 மணி | 03/08/2018 | வெள்ளி | கேதார கௌரி அம்பாள் அருட்காட்சி |
| 21/07/2018 | சனி | இராஜ இராஜேஸ்வரி அருட்காட்சி | 04/08/2018 | சனி | வசந்தோற்சவ அருட்காட்சி |
| 22/07/2018 | ஞாயிறு | கனகதாரா இலட்சுமி அருட்காட்சி | 05/08/2018 | ஞாயிறு | பக்தானுக்கிரக அருட்காட்சி |
| 23/07/2018 | திங்கள் | நாகபூசணி அம்பாள் அருட்காட்சி | 06/08/2018 | திங்கள் | சந்தான பாக்கிய லட்சுமி அருட்காட்சி (தங்கரதப் பவனி) |
| 24/07/2018 | செவ்வாய் | மீனாட்சி அம்பாள் அருட்காட்சி | | | |
| 25/07/2018 | புதன் | சரஸ்வதி வித்யா அருட்காட்சி | 07/08/2018 | செவ்வாய் | ஜோதி மங்கள அருட்காட்சி |
| 26/07/2018 | வியாழன் | அர்த்தநாதீஸ்வர அருட்காட்சி | 08/08/2018 | புதன் | ஓம்காரரூப தர்சன அருட்காட்சி |
| 27/07/2018 | வெள்ளி | கைலாச தரிசன அருட்காட்சி | 09/08/2018 | வியாழன் | மகாதுர்க்கா தரிசன அருட்காட்சி |
| 28/07/2018 | சனி | அன்னைபூர்ணாம்பிகை அருட்காட்சி | 10/08/2018 | வெள்ளி | வேட்டைத் திருவிழா |
| 29/07/2018 | ஞாயிறு | அபிராமி தரிசன அருட்காட்சி | 11/08/2018 | சனி | சகோபுர தர்சன அருட்காட்சி (சப்பரம்) |
| 30/07/2018 | திங்கள் | சௌபாக்கியா அம்பிகை அருட்காட்சி | 12/08/2018 | ஞாயிறு | இரதோற்சவ அருட்காட்சி (தேர்)காலை10.00மணி |
| 31/07/2018 | செவ்வாய் | காமாட்சி அம்பாள் அருட்காட்சி | 13/08/2018 | திங்கள் | தீர்த்த உற்சவம், அருட்காட்சி |
| 01/08/2018 | புதன் | அனந்தசயன அருட்காட்சி | 14/08/2018 | செவ்வாய் | பூங்காவன அருட்காட்சி, திருவூஞ்சல் |
| 02/08/2018 | வியாழன் | புஸ்பக விமான அருட்காட்சி | 15/08/2018 | புதன் | வைரவர் மடை |

மகோற்சவ குரு:

"சிவஞானசம்பந்தன்" "சிவாகம விசாரதா" **சிவ ஸ்ரீ தியா - உமாசுதகுருக்கள்** BA Hons MA சைவசித்தாந்தம்

**பூசைக்குரிய பூக்கள், பால், இளநீர் போன்றவற்றை அபிஷேகத்திற்கு முன்னதாக ஆலயத்தில் கொடுத்து உதவுக. அனைவரும் வருக. அன்னையின் அருள் பெறுக.**

அன்னையின் சேவையில்

**விழா உபயகாரர்களுடன், ஆலய நிர்வாக சபை, அறங்காவலர் சபை**

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"







# SHRI KANAGA THURKKAI AMMAN TEMPLE


5 Chapel Road, West Ealing, London W13 9AE

Telephone No.: 0208 810 0835 Fax: 0208 840 0485, Email: info@ammanealing.org web: www.ammanealing.org


# MAHOTSAVAM (FESTIVAL) - 2018

Dear Devotees,

London Shri Kanagathurkkai Amman Temple annual Mahostsava festival will be celebrated for 27 days. Festival starts with Gnanapathy Hommam on 19/07/2018 evening and Flag hosting on 20/08/2018 at 9.30am. The Chariot festival is on 12/08/2018 and festival ends with Vairavar madai on 15/08/2018.



## FROM 20-07-2018 TO 13-08-2018 POOJA TIMES AS FOLLOWS:



| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Morning** | **08:00** | **Sankalpam** | **Evening** | **05:15** | **Sayaratsai Pooja** |
| **Morning** | **08:15** | **Abisekam** | **Evening** | **05:45** | **Sthampa Pooja** |
| **Morning** | **10:45** | **Sthampa Pooja** | **Evening** | **06:15** | **Cultural Programme** |
| **Morning** | **11:30** | **Vasantha Mandapa Pooja** | **Night** | **07:00** | **Vasantha Mandapa Pooja** |
| **Afternoon** | **12:45** | **Maha Pirasatham** | **Night** | **10:30** | **Arthasamapooja** |

## MAHOTSAVA PROGRAMME

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 20/07/2018 | Friday | **Flag Hoisting 9.30am** | 03/08/2018 | Friday | Ketharagowri Ampaal Appearance |
| 21/07/2018 | Saturday | Raja Rajeswari Appearance | 04/08/2018 | Saturday | Vasanthotsava Appearance |
| 22/07/2018 | Sunday | Kanagadhara Lakshmi Appearance | 05/08/2018 | Sunday | Pakthankraga Appearance |
| 23/07/2018 | Monday | Nagapooshani Appearance | 06/08/2018 | Monday | Santhanapakya Lakshmi Appearance<br>Procession of Golden Chariot |
| 24/07/2018 | Tuesday | Meenadhi Appearance | 07/08/2018 | Tuesday | Jothi Mangala Appearance |
| 25/07/2018 | Wednesday | Saraswathy Vidhya Appearance | 08/08/2018 | Wednesday | Ongara Ruba Dharsana Appearance |
| 26/07/2018 | Thursday | Arthanatheeswar Appearance | 09/08/2018 | Thursday | Maha Dhurga Dharsana Appearance |
| 27/07/2018 | Friday | Kailaya Dharisana Appearance | 10/08/2018 | Friday | Hunting Festival Appearance |
| 28/07/2018 | Saturday | Annapoornampikai Appearance | 11/08/2018 | Saturday | Sakopura Dharsana Appearance |
| 29/07/2018 | Sunday | Abirami Dharisana Appearance | 12/08/2018 | Sunday | **Chariot Festival 10.00am** |
| 30/07/2018 | Monday | Shaupakiyambika Appearance | 13/08/2018 | Monday | Theerththa Vaari Appearance |
| 31/07/2018 | Tuesday | Kamadshi Appearance | 14/08/2018 | Tuesday | Poonkavam Festival Sangabisekam<br>– Sakasdhira (1008) |
| 01/08/2018 | Wednesday | Ananthasayana Appearance | 15/08/2018 | Wednesday | Vairavar Madai |
| 02/08/2018 | Thursday | Pushpaka Vimana Appearance | | | |

Devotees are expected to strictly adhere to Saiva principles during the festival season and abide by Temple rules.
Flowers, milk and coconut water offerings need to be made before the Abisekam.

**All are welcome.**

Festival Sponsors, Executive Committee & Trustees.

---

அம்பிகை அடியார்களே, தங்களின் பேருதவியினால் தாயகத்தில் 13 இல்லங்களில் 500 வரையான பிள்ளைகள் பராமரிக்கப்படுகின்றார்கள். கடந்த ஆண்டில் "காக்கும் கரங்கள்" திட்டத்திற்காக **£69,751.00** பவுண்களும் ஏனைய பணிகளுக்காக **£136,969.00** அனுப்பப்பட்டுள்ளது. ஆலய தொடக்க காலத்தில் இருந்து தாயகப் பணிக்கு **£2,485,610.00** அனுப்பப்பட்டுள்ளன.

ஆதரவற்ற பிள்ளைகளை என்றும் அரவணைப்போம்! அவர்களுக்கு வாழ வழிகாட்டுவோம்!
அவர்களுக்குப் படிப்பறிவித்து, இருளகற்றுவோம். அவர்களுக்கு கலங்கரை விளக்காக அமைவோம்.!
அவர்களை உயர்த்தும் ஏணிப்படியாக எங்களை அர்ப்பணிப்போம்.!

தேர்த்திருவிழா அன்று அர்ச்சனைத் தட்டுக்கள் மூலம் கிடைக்கும் நிதியாவும் வழமைபோன்று தாயக கல்வி உள்ளிட்ட அவசர பணிக்கு பகிர்ந்தளிக்கப்படும்.

**The money that is collected from the "Archanai Thatu" on Chariot festival day will be donated to Education project and welfare of our people in Srilanka**

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# South Harrow Food & Wines

## 234, 236 Northolt Road
## South Harrow

ஆடியில் வழங்கும் கோலாகல மலிவு விற்பனை

**நீங்கள் நம்ப முடியாத மலிவு விலையில்**
**இலங்கை இந்திய உணவு பொருட்கள்**
**பசுமை மாறாத மரக்கறி வகைகள்**
**புது சுவை மாறாத கடல் உணவு வகைகள்**




நா. சிவானந்தசோதி



# வெளிநாட்டில் கோயில்கள்

அண்மையில் அமெரிக்காவில் ஒரு புதிய கோயில் கட்டியிருப்பதாகச் செய்தி பார்த்தேன். பென்சில்வேனியா என்ற மாகாணத்தில், சுவாமி நாராயணன் கோயில் சுமார் 162 ஏக்கர் நிலப்பரப்பில் பிரமாண்டமாகக் கட்டப்பட்டுள்ளது. பலகோடி பணச்செலவில் கட்டியுள்ளார்கள். பலரும் பாராட்டுகிறார்கள். இந்தக் கோயிலைக் கட்டியவர்களுக்கு, சைவ சமயத்தில் உள்ளதுபோல, வேதசிவாகம முறைகள், கட்டுப்பாடுகள் இருப்பதுபோலக் போலக் கோயில் கட்டுவதற்கு, கட்டுப்பாடுகள் இருக்கின்றனவா என்று தெரியவில்லை. ஆனால், அவர்களிம் பணம் இருக்கிறது, சமூக ஒற்றுமை இருக்கிறது. ஆள்பலம் இருக்கிறது. அதனால் கட்டுகிறார்கள். தொண்டர்களே கட்டுகிறார்கள். ஒரு பளிங்கு மாளிகைபோல அந்தக் கோயில் இருக்கிறது.

தமிழர்களாகிய எங்களைப் பொறுத்தவரை இதுபோல, பிரமாண்டமாக நாம் கோயில் கட்டவேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் எங்கள் கோயில் அமைப்பு வித்தியாசமானது. ஆனால் எங்களால் நல்ல கோயில், எங்கள் முறைக்கு ஏற்பக் கட்ட இயலாது. நம்மிடையே ஒற்றுமை கிடையாது என்பது இதற்கு ஒரு காரணம். ஒருவர் கோயிலை ஆரம்பிப்பார். அவருடன் சிலர் சேர்ந்து செயலாற்றுவார்கள். பின் செயற்குழுவில் சண்டை ஆரம்பிக்கும். ஒன்றில் ஆரம்பித்தவரை வெளியேற்றிவிட்டு தாங்கள் அந்தக் கோயிலை நடத்துவார்கள். அல்லது பிரிந்துபோய் வேறு கோயில் ஆரம்பிப்பார்கள். அல்லது வெளியேற்றப்பட்டவர் வேறுசில நண்பர்களுடன் சேர்ந்து ஒரு கோயில் ஆரம்பிப்பார்கள். இதுதான் கடந்த சில வருடங்களாக இந்த நாட்டில் நடந்துவருகிறது. லண்டனிலும் சுற்றுப் புறங்களிலுமுள்ள கோயில்கள் புற்றீசல்கள் போலத் தோன்றுவதைப் பார்த்தாலே இந்த உண்மை விளங்கும். ஐக்கிய இராய்ச்சிய நாட்டில் மட்டுமன்றி, ஏனைய வெளிநாடுகளிலும் இதுபோலக் கோயில்களை நம்மவர்கள் கட்டிக்கொண்டே இருக்கிறார்கள். இது எங்கே போய்

முடியும் என்று தெரியவில்லை. சில கோயில்களில் தற்போது ஆட்சிக்குழுவில் இருப்பவர்களின் பிள்ளைகளே கோயிலுக்கு வருவதில்லை. அடுத்த தலைமுறையினர் கோயிலை எப்படிப் பேணுவார்கள் என்பது பெரிய கேள்விக்குறி.

சைவசமயத்தில், கோயில்கள் கட்டுவதென்றால், அதற்கெனச் சில வழிமுறைகள் இருக்கின்றன. சிவாகம முறை இருக்கிறது. அமைப்பின் அளவு, உள்ளே இருக்கும் மூர்த்தங்களின் அளவு, வீதி அமைப்பு என்று பல விடயங்களை நாம் கருத்தில் கொள்ளவேண்டிய அவசியம் இருக்கிறது. என்னைப் பொறுத்தவரை, இந்நாட்டில் உள்ள பல கோயில்களில், ஒரு கோயில்கூட சரியாக அமைந்திருக்கிறது என்று ஒப்புக்கொள்ள முடியவில்லை. இங்குள்ள எல்லாக் கோயில்களிலும் சிவனை ஒரு மூலையில் வைத்துவிட்டு மற்றைய மூர்த்தங்களுக்கு முக்கியம் கொடுக்கிறார்கள். இது மிகப் பிழையான செயல் என்று கருதுகிறேன். இது எதைப்போல இருக்கிறது என்று சிந்தித்தால், ஓர் அலுவலகத்தில் பெரிய அதிகாரியை மூலையில் இருத்திவிட்டு அவருக்குக் கீழே வேலை செய்பவர்கள் அனைவரையும் முன்னிலைப்படுத்தி இருத்தினால் எப்படி இருக்கும் என்பதுபோலத்தான். சிவன்கோயில்களில் மற்றைய மூர்த்தங்களை பரிவாரத்தில் வைத்து பிரதிட்டை செய்து வழிபடலாமேயொழிய, மற்றைய மூர்த்தங்கள் பிரதானமாக உள்ள கோயிலில் சிவனைப் பின்னால் வைத்து வழிபடுவது பாவமான செயல், பொருத்தமற்ற செய்ல என்றே நான் கருதுகிறேன். மோட்ச அர்ச்சனை செய்வதற்கென்றே சிவமூர்த்தத்தை ஒரு வருவாய்தரும் பொருளாகவே வைத்திருக்கிறார்கள் என்று கருதவேண்டியுள்ளது.

நான் 1967ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாட்டிலுள்ள பல கோயில்களுக்குப் போய் வந்து கொண்டிருக்கிறேன். ஈழத்திலும் பல கோயில்களுக்குப் போயிருக்கிறேன். சிவன்கோயில் அல்லாத கோயில்களில், அதாவது பிள்ளையார் கோயில், முருகன் கோயில், துர்க்கை கோயில் என்றுள்ள சிறு சிறு கோயில்கள் பல இருக்கின்றன. என் அறிவுக்கு எட்டியவரை அந்தக் கோயில்களில் சிவனை ஒரு மூலையில் வைத்து வழிபடுவதை நான் என்றுமே பார்த்ததில்லை.

எங்கள் ஊரிலும் தமிழ்நாட்டிலும் வரலாறுகளைப் பார்த்தால், கோயில்களைக் கண்டபடி எல்லா இடங்களிலும் கட்டுவதில்லை. பழைய கோயில்கள் தோன்றிய இடங்களுக்கு தல வரலாறு என்று வரலாறுகள் இருக்கும். சில இடங்களில் சிவலிங்கம் தாமாகத் தோன்றியிருக்கும். இதைச் சுயம்பு என்று (தானாகத் தோன்றியது) சொல்வார்கள். வேறு சில இடங்களில் முனிவர்கள், சித்தர்கள், ரிஷிகள் இருந்து பலவருடங்கள் தவம் செய்திருப்பார்கள். இப்படி ஏதோ ஒரு விதத்தில் ஒரு வரலாறு இருக்கும். ஒரு சிறப்பு இருக்கும் அல்லது ஒரு சக்தி இருக்கும். அப்படியான இடங்களிலேயே கோயில்கள் அமைந்தன. அப்படியான கோயில்களிலேதான் தெய்வாம்சம் இருக்கும்.

இந்த நாட்டிலே அப்படி இடங்கள் எதுவும் இல்லை. சில கோயில்கள் பழைய கிறித்துவ ஆலயங்கள், இடுகாடுகள் அமைந்த இடங்களில் தோன்றியுள்ளன. சில கோயில்கள் கடைகளுக்கு நடுவே தோன்றியுள்ளன. சில கோயில்கள் கிட்டங்கி எனப்படும் பொருள்கள் சேகரித்து வைக்கும் இடங்களில் தோன்றியுள்ளன. பழைய காலத்தில் மன்னர்கள் கோயில் அமைக்கு முன்னர், அரசவையில் இருக்கும் பெரியவர்களை, அறிஞர்களை ஆலோசனை கேட்டே அமைத்தார்கள். கோயில் அமைக்கவென்றே இடத்தைத் தேடினார்கள். பொருத்தமான அளவான இடம் கிடைத்தால் மட்டுமே கோயில் நிறுவினார்கள். தான்தோன்றி மூர்த்தங்களைச் சுற்றிக் கோயில்கள் அமைக்கும்போதும் இடத்தை

அவர்கள் கட்டுப்படுத்தவில்லை. ஆனால் இந்த ஊரில் இடத்தை எடுத்துவிட்டு அதற்கு ஏற்றாற்போலக் கோயிலைக் கட்டுகிறார்கள். அல்லது, ஓரிடத்தில் அமைத்துவிட்டுச் சில நாள்களின்பின் இன்னோரிடத்துக்கு மாற்றுகிறார்கள். கோயில் அளவுகளை மாற்றுகிறார்கள். சந்நிதியின் அளவுக்கு ஏற்றமாதிரி மூர்த்தங்களைச் செய்வதில்லை. மூர்த்தங்களை முதலிலே செய்துவிட்டு இடம் கிடையாமையால் சிறிய கோயிலை அமைத்து அங்கே பிரதிட்டை செய்கிறார்கள். பரிமாணங்களுக்கு ஏற்றதாகக் கோயில்கள் அமைகிறதா இல்லையா என்று சிறிதளவும் சிந்திப்பதில்லை.

இன்னொரு முக்கியமான விடயத்தையும் இங்கே கூறவேண்டும். பழைய புராண வரலாறுகளை எடுத்துக்கொண்டால், கடவுளைத் தரிசிக்க, யாகம் செய்ய, கோயில்கள் அமைக்க, தவம் செய்ய முனிவர்களும் ஞானிகளும் தேவர்களும் தெரிவுசெய்கின்ற இடம் பாரதபூமியாகும். வேறு எங்கு செய்தாலும் பலன் அவ்வளவாகக் கிடைக்காது என்றொரு காரணம் கூறப்படுகிறது. வெளிநாடுகளில் உள்ளவர்கள் முறையான வழிபாடு செய்து பலன்பெற விரும்பினால் அங்கேதான் போகவேண்டும். அப்படியானால் வேறு நாடுகளில் வழிபட இயலாதா என்ற கேள்வி எழுகிறது. ஓரளவாவது முறைகளைப் பின்பற்றி வழிபாடுகள் செய்தால் ஓரளவு பயன் கிடைக்க வாய்ப்பு உண்டு என்று கொள்ளலாம். முறைகளைப் பின்பற்றுவதென்றால் என்ன செய்யவேண்டும்?

கோயில்களிலே ஆறுகாலப் பூசைகள் நடைபெறவேண்டும். அது இயலாதபோது மூன்று காலப் பூசைகளாவது நடக்கவேண்டும். ஆகக் குறைந்தது நாளுக்கு இரண்டு முறையாவது பூசை வழிபாடுகள் நடக்கவேண்டும். கோயில்களிலே வழிபாடுகளின் ஓர் அங்கமாக, தேவார், திருவாசக திருமுறைகள் ஓதப்படவேண்டும். இங்குள்ள பல கோயில்களில் தகுதிவாய்ந்த (லூயிஷீம் சிவன்கோயிலைத் தவிர) ஓதுவார்கள் இல்லை. இங்குள்ள கோயில் தருமகர்த்தாக்கள் இந்த விடயத்தில் அவ்வளவாக அக்கறை காட்டுவதாகவும் தெரியவில்லை. தேவாரத்தை யாரும் பாடலாம், எப்படியும் பாடலாம் என அவர்கள் நினைக்கிறார்கள். மந்திரங்கள் ஓதுவதற்கு ஒரு முறை இருப்பதழிபுலீல தேவாரம் ஓதுவதற்கும் முறை இருக்கிறது. யாரும் எப்படியும் ஓத இயலாது. இவற்றைத் தெரிந்துகொள்ளாது, தெரிய முயலாது எல்லோரையும் திருமுறை ஓத விடுகிறார்கள். எல்லோரும் திருமுறை ஓத விழைகிறார்கள். "ஐந்து கரத்தனை", "வாக்குண்டாம்" போன்றவற்றைத் தேவாரம் என்று நினைத்துப் பாடுகிறார்கள். தேவாரங்களைப் பிழையாகப் பாடுகிறார்கள். இல்லையேல் பஜனை என்ற பெயரில் என்னென்னவோ பாடுகிறார்கள். இந்தப் பிழைகளும் தவிர்க்கப்படவேண்டியவை. கோயில் வழிபாட்டு முறைகளை அறிந்தவர்களை அழைத்துவந்து இங்குள்ள கோயில்களில் திருவிழாக் காலங்களில் அல்லது வாரந்தோறும் வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளில் சொற்பொழிவு ஆற்றவைக்கலாம்.

இந்த நாட்டிலுள்ள கோயில் தருமகர்த்தாக்கள் சமய அறிவைக் கொஞ்சமாவது தேடவேண்டும். அடுத்த தலைமுறை அதை அறிய வாய்ப்புக்களை உருவாக்கவேண்டும். தேவாரத் திருமுறைகளை கற்கவேண்டும். கற்றவர்களிடம் கேட்டு அறியவேண்டும். அப்படி எதுவும் நடக்காவிட்டால் இன்னும் சில ஆண்டுகளில் இங்குள்ள கோயில்கள் அருங்காட்சியகங்களாக மாறிவிடும். அல்லது வேற்றுமத வழிபாட்டு இடங்களாக மாறும். பின்னர் வருந்துவதிற் பயனில்லை.

■

# என் அன்பு இனியவர்களே...

லண்டனில் தமிழர் தகவல் கடந்த பதினாறு ஆண்டுகளாக பல்வகை இன்னல்கள்தாண்டி வெளிக்கொண்டுவரப்பட்டதை அறிவீர்கள். சொல்லவேண்டிய உண்மைகள் வெளிப்படுத்தப்பட்ட காலங்களில் மனக் கசப்புகளும் வராமலில்லை. எனினும் என்னிடம் எவர்மேலும் எந்தச் காழ்ப்புணர்வுகளும் இல்லை. அவை சந்தர்ப்ப வெளிப்பாடுகளாகவே இருந்தன. நான் உண்மையானவர் அதனால் தற்போது பொருளாதாரத்தில் நலிந்துள்ளேன். உங்களிடம் உதவி கேட்கின்றேன்.

இதழைத் தொடர்ந்து நடத்த நிதிதேவை. ஆர்வமுள்ள அன்பர்களிடமிருந்து அன்பளிப்புகளை எதிர்பார்க்கிறேன். ஒரு நிரந்தவைப்பினூடாகப் பெறும் வருமானத்திலிருந்து இந்த இதழைப் தொடர்ந்து வெளியிட எண்ணுகிறேன்.

தங்கள் ஆதரவின் பலம்தான் இதன் எதிர்காலம்.

கணக்கு எண் : 29513668

வங்கி இலக்கம் : 77 91 29

வங்கி : Lloyds TSB




# அகவை 50

ஈழத்தில் நடந்த விடுதலைப் போராட்டம் பல குடும்பங்களைப் பிரித்துவிட்டது. ஆனால் வெளி நாடுகளுக்குக் குடி பெயர்ந்தவர்களிடையே புதிய நட்பு, புதிய அறிமுகம், புதிய உறவு எனப் பல புதிய குடும்பங்கள் உருவாகவும் இந்த யுத்தம் காரணமாக அமைந்துவிட்டது. அப்படி நடந்த யுத்தத்தால், நாட்டில் ஏற்பட்ட அழிவால், நான் சென்னை அண்ணா நகருக்குக் குடிபெயர்ந்து வாழ்ந்துகொண்டிருந்தேன். அப்போது எனக்கு அறிமுகமானவர்கள்தான் வசந்தன், ஜயந்தன் என்ற இரட்டைப் பிறவிகள். என்னை அவர்கள் முதன்முதல் சந்தித்தபோது அவர்களுக்குப் பத்தொன்பது வயது. பின்னர் நான் இலண்டன் வந்தபோது, அவர்களும் என்னைப் பின்தொடர்ந்து இலண்டன் வந்து சேர்ந்தார்கள்.

இன்று அவர்களின் அறிமுகம் கிடைத்து முப்பத்தொரு ஆண்டுகள் முடிந்துவிட்டன. தொடர்பு இன்னும் தொடர்ந்துகொண்டே இருக்கிறது. இந்த இரட்டையர் அண்ணா நகரில் என்னுடைய கடையில் வேலை செய்தார்கள். பின்னர் இங்கிலாந்து வந்தபின், இங்குள்ள பேரங்காடியில் வேலை செய்தார்கள். எப்பொழுதும் சுறுசுறுப்பாகவே இருவரும் இருப்பார்கள். ஓயாது உழைப்பார்கள். அதனால் சுயமாகத் தொழில் செய்து, நல்ல நிலைக்கு அவர்கள் முன்னேறியுள்ளார்கள். தற்போது இந்த நாட்டில் இந்த இருவரும் வசதியான வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

வசந்தன், ஜயந்தன் இருவருக்கும் இப்போது ஐம்பது வயது ஆகிவிட்டது. பொன்விழா ஆண்டாக இந்த ஆண்டு அவர்களுக்கு அமைகின்றது. இந்த இருவரும் மேலும் பல்லாண்டுகள் சிறப்பாக சகல நலத்தோடும் நிறைந்த சுகத்தோடும் வாழவேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

# கோவில்
## திருவிழாக்கள்





கோயிலில் நடைபெறும் திருவிழாக்களை இரு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று அலங்காரத் திருவிழா. மற்றையது மகோற்சவம் அல்லது பிரம்மோற்சவம் எனக் குறிப்பிடப்படும் தேர்த்திருவிழாவுடன் நடைபெறும் பெருவிழா. கொடிமரம் இல்லாத சிறிய கோயில்களில் நடைபெறும் திருவிழா அலங்காரத் திருவிழா ஆகும். கொடியேற்றத்துடன் ஆரம்பித்து தீர்தத் திருவிழாவுடன் நிறைவடையும் பெருவிழா மகோற்சவம் என்று குறிப்பிடப்படுகிறது.

திருவிழாக்கள் இறைவன் செய்யும் ஐந்தொழில்களான படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பவற்றைக் குறிக்கும் என்று ஒரு கருத்து உண்டு. கொடியேற்றம், திருக்கல்யாணம் என்பவை படைத்தலைக் குறிக்கும். தினம் நடக்கும் வாகனத் திருவிழாக்கள் காத்தலைக் குறிக்கும். தேர்த்திருவிழா அழித்தலைக் குறிக்கும். கொடியிறக்கம் மறைத்தலைக் குறிக்கும். சண்டேசுரர் திருவிழாவும் ஆசாரியர் திருவிழாவும் அருளலைக் குறிக்கும் என்று சொல்லப்படுகிறது.

கோயில்களில் தினமும் நடைபெறும் பூசை வழிபாடுகளில் அவ்வப்போது ஏற்படும் குறைகளுக்குப் பரிகாரமாக இந்தத் திருவிழாக்கள் நடைபெறுவதாக அறிஞர் கூறுவர். இந்த இரண்டு விதமான திருவிழாக்களிலும் பொதுவான நடைமுறை பஞ்சலோகத்தாலான திருவுருவங்களை ஒவ்வொரு நாளும் வெவ்வேறு வாகனத்தில் வைத்து, கோயிலைச்சுற்றி ஊர்வலமாக எடுத்துவரப்படுவது ஆகும்.

திருவிழாக் காலத்தில் அவ்வூர் மக்கள் தத்தம் வீடகளைச் சுத்தமாக்குவார்கள். தினமும் கோயிலுக்குப் போவார்கள். சிலர் விரதம் இருந்து திருவிழா முடிந்தபின்னரே உணவு உண்பார்கள். ஊர் ஒன்றுகூடி உவ்வொரு நாளும் கொண்டாடும். சில கோயில்களில் ஏழை மக்களுக்கு அன்னதானமும் வழங்கப்படும்.

தினமும் கோயிலுக்குச் சென்று வழிபட இயலாதவர்களுக்கு இந்தத் திருவிழாக்கள் தரிசனம் செய்ய உதவியாக அமைகின்றன. தேரிலன்று வழிபட்டால் ஒரு வருடம் வழிபட்ட பலன் கிடைக்கும் என்றும் சொல்வர்.

இறைவனுக்கு நன்றி சொல்வதற்காகவும், சமூகம் ஒன்றுகூடிக் கொண்டாடுவதற்காகவும், அன்றாடக் கவலைகளை மறந்து மக்கள் குதூகலமாக இருப்பதற்காகவும் இந்த விழாக்கள் வழியமைக்கின்றன என்றால் அது பொருத்மானதாக இருக்கிறது. ■



எட்டாக் கனியையும் நண்பர்களுடைய தோளில் ஏறி பறிக்க கற்றுக்கொள்கிறார்கள் சிறுவர்கள் பலர். மருத்துவ துறையிலும் இதே போன்ற ஒன்றுதான் நிகழ்ந்திருக்கிறது. கடந்த காலத்தில் வாழ்ந்த பிரபல மருத்துவர்களுடைய தோள்களில் நின்றுகொண்டு சாதனை எனும் உயரமான ஏணியில் ஏறியிருக்கிறார்கள் மருத்துவ ஆய்வாளர்கள்.

ஹிப்போகிரேடஸும் பாஸ்டரும் கடந்த காலத்தில் சுகமளித்தவர்களில் பிரபலமானவர்கள். வெசாலியஸ், வில்லியம் மோர்டன் போன்ற பரிச்சயமில்லாத சில பெயர்களும் இருக்கின்றன. நவீன மருத்துவம் எந்த விதத்தில் இவர்களுக்கு கடமைப்பட்டிருக்கிறது?

கடந்த காலங்களில் குணப்படுத்தும் முறைகள் பெரும்பாலும் ஓர் அறிவியல் ஆராய்ச்சியின் அடிப்படையில் இருக்கவில்லை, மாறாக மூடநம்பிக்கையும் மத சடங்குகளும் நிறைந்த ஒன்றாகவே இருந்தன. டாக்டர் ஃபிலிக்ஸ் மார்டீ ஈபான்யெஸ் என்பவரால் பதிப்பிக்கப்பட்ட தி எபிக் ஆஃப் மெடிசின் என்ற நூல் இவ்வாறு கூறுகிறது: “நோயை முறியடிப்பதற்கு..., மருந்தும் மதமும் கலந்த ஒரு மருத்துவத்தை மெசொப்பொத்தோமியர் நாடினர், ஏனென்றால் நோய் என்பது தெய்வத்திடமிருந்து வரும் தண்டனை என அவர்கள் நம்பினார்கள்.” அதற்குப் பிறகு வந்த எகிப்திய மருத்துவமும் அதேபோல் மதத்தில் வேரூன்றியிருந்தது. இவ்வாறு, ஆரம்ப காலம் முதற்கொண்டே சுகமளிப்பவர் மதரீதியில் ஓர் உயர்ந்த மனிதராக பாராட்டப்பட்டார்.




# நவீன மருத்துவம் எந்தளவு சாதிக்க முடியும்?

த க்ளே பெடஸ்டல் என்ற நூலில், டாக்டர் தாமஸ் ஏ. ப்ரெஸ்டன் இவ்வாறு கூறுகிறார்: “பூர்வீக மனிதருடைய நம்பிக்கைகள் பல, இன்றுவரை மருத்துவ துறையில் அதன் தடயத்தைப் பதித்திருக்கின்றன. வியாதியை நோயாளியால் கட்டுப்படுத்த முடியாது, மருத்துவருடைய மீமானிட சக்தியால்தான் குணப்படுத்த முடியும் என்பதும் அந்நம்பிக்கைகளில் ஒன்று.”

### அடித்தளம் போடுதல்

ஆனால் காலப்போக்கில், மருத்துவத்தை அதிகமதிகமாக அறிவியல் கண்ணோட்டத்தில் பார்க்க ஆரம்பித்தார்கள். பூர்வகாலத்தில் அறிவியல் முறையில் சுகமளித்தவர்களில் தலைசிறந்தவர் ஹிப்போகிரேடஸ். இவர் சுமார் பொ.ச.மு. *460*-ல், கோஸ் என்ற கிரேக்க தீவில் பிறந்தார். இவர் மேலைநாட்டு மருத்துவத்தின் தந்தை என பலரால் போற்றப்படுகிறார். ஹிப்போகிரேடஸ் மருத்துவத்தை பகுத்தறிவுடன் அணுகுவதற்கு அடித்தளம் போட்டார். வியாதி என்பது தெய்வத்திடமிருந்து வரும் தண்டனை என்ற எண்ணத்தை ஒதுக்கிவிட்டு, அது இயல்பாகவே வரும் ஒன்று என்பதை நிரூபித்தார். உதாரணமாக, காக்காய்வலிப்பு நோயை கடவுளால் மாத்திரமே குணப்படுத்த முடியும் என்பதால் அது புனித நோய் என நெடுங்காலமாக அழைக்கப்பட்டது. ஆனால் ஹிப்போகிரேடஸ் இவ்வாறு எழுதினார்: “பிற வியாதிகளைப் போலவே புனித வியாதி என அழைக்கப்படும் வியாதியும் கடவுளிடமிருந்து வருவதாகவோ அல்லது புனிதமானதாகவோ எனக்குத் தோன்றவில்லை, ஆனால் இயல்பாக வரும் ஒன்றே.” பல்வேறு வியாதிகளுக்கு அறிகுறிகளை கண்டறிந்து, பிற்காலத்தில் எடுத்துப் பார்ப்பதற்காக அவற்றை பதிவு செய்து வைத்ததில் ஹிப்போகிரேடஸே முதன்மையானவர்.

நூற்றாண்டுகளுக்குப் பிறகு, பொ.ச. *129* -ல் பிறந்த கிரேக்க மருத்துவராகிய கேலன் இதே போன்று புதுமையான அறிவியல் ஆராய்ச்சி செய்தார். மனிதர்களையும்

விலங்குகளையும் அறுத்துப்பார்த்ததன் அடிப்படையில், உடற்கூறு சம்பந்தமாக கேலன் ஒரு பாடநூலை தயாரித்தார், அதை பல நூற்றாண்டுகளாக மருத்துவர்கள் பயன்படுத்தினர்! 1514-ல் ப்ருஸ்ஸெல்ஸில் பிறந்த ஆன்டிரியாஸ் வெசாலியஸ் மனித உடலின் வடிவமைப்பு (ஆங்கிலம்) என்ற புத்தகத்தை எழுதினார். அப்புத்தகம் எதிர்ப்பை சந்தித்தது, ஏனென்றால் கேலன் சொன்ன பல விஷயங்களுக்கு முரணாக அது இருந்தது. ஆனால் அதுவே நவீன உடற்கூறியலுக்கு அடித்தளமாக விளங்கியது. டீ குரோஸன் (பிரபலமானவர்கள்) என்ற நூல் சொல்கிறபடி, வெசாலியஸ் "இதுவரை வாழ்ந்த மிக முக்கியமான மருத்துவ ஆராய்ச்சியாளர்களில் ஒருவரானார்."

இருதயத்தையும் இரத்த ஓட்டத்தையும் பற்றிய கேலனுடைய கொள்கைகளும் காலப்போக்கில் காலாவதியாகிவிட்டன. ஆங்கிலேய மருத்துவர் வில்லியம் ஹார்வி மிருகங்களையும் பறவைகளையும் அறுத்து ஆய்வு செய்வதில் பல வருடங்களை செலவழித்தார். இருதய வால்வுகள் எப்படி இயங்குகிறது என்பதை கவனித்தார், இருதய வென்ட்ரிக்கிள்கள் ஒவ்வொன்றிலும் உள்ள இரத்தத்தின் அளவை கணக்கிட்டு, உடலிலுள்ள இரத்தத்தின் அளவை மதிப்பிட்டார். விலங்குகளின் இருதயம் மற்றும் இரத்தத்தின் இயக்கம் என்ற ஆங்கில புத்தகத்தில் ஹார்வி தம்முடைய கண்டுபிடிப்புகளை 1628ல் வெளியிட்டார். அவர் கண்டனம் செய்யப்பட்டார், எதிர்க்கப்பட்டார், தாக்கப்பட்டார், அவமதிக்கப்பட்டார். ஆனால் அவருடைய கண்டுபிடிப்புகள் மருத்துவத்தில் ஒரு திருப்புக் கட்டமாக இருந்தன உடலின் இரத்த ஓட்ட மண்டலம் கண்டுபிடிக்கப்பட்டது!

**முடி வெட்டும் தொழிலிலிருந்து அறுவை சிகிச்சை வரை**

அறுவை சிகிச்சை முறைகளிலும்கூட அதிக முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இடைக்காலங்களில் அறுவை சிகிச்சை என்பது எப்போதுமே முடி வெட்டுபவர்களின் பணியாக இருந்தது. 16-ம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த முடி வெட்டுபவரான அம்ராஸ் பாரெ என்பவரே நவீன நாளைய அறுவை சிகிச்சையின் தந்தை என சிலர் சொல்வதில் வியப்பில்லை. ஏனெனில் அறுவை சிகிச்சை செய்வதில் முன்னோடியாக விளங்கிய அவர் பிரான்ஸிலுள்ள நான்கு அரசர்களிடம் பணியாற்றியவர். அதோடு, அறுவை சிகிச்சைக்குத் தேவையான எண்ணற்ற கருவிகளையும் பாரெ கண்டுபிடித்தார்.

19-ம் நூற்றாண்டின் அறுவை மருத்துவர் இன்னும் எதிர்ப்பட்டுக் கொண்டிருந்த பெரும் பிரச்சினைகளில் ஒன்று என்னவெனில் அறுவை சிகிச்சையின்போது வலியை குறைக்க முடியாமல் போனதுதான். ஆனால் 1846-ல் பல் அறுவை மருத்துவரான வில்லியம் மோர்டன் என்பவர் அறுவை சிகிச்சையின்போது மயக்க மருந்தை பரவலாக பயன்படுத்துவதற்கு வழியைத் திறந்து வைத்தார்.

ஜெர்மானிய இயற்பியலாளர் வில்ஹெம் ரன்ட்ஜன் 1895-ல் மின்சாரத்தைக் கொண்டு ஆய்வு செய்கையில் அதன் கதிர்கள் எலும்பில் பாயாமல் சதை வழியே பாய்வதை கண்டார். அக்கதிர்களின் தோற்றுமூலத்தை அவர் அறியவில்லை, ஆகவே அவர் அதை ஙீ கதிர்கள் என அழைத்தார். ஆங்கிலத்தில் இன்னும் அப்பெயர்தான் வழங்கப்படுகிறது. (ஜெர்மனில் ரன்ட்ஜன்ஸ்ட்ராலன்.) "ரன்ட்ஜனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதென' ஜனங்கள் சொல்வார்கள்" என்று ரன்ட்ஜன் தன் மனைவியிடம் சொன்னதை டீ குரோஸன் டாய்ச்சன் (மாபெரும் ஜெர்மானியர்) என்ற புத்தகம் குறிப்பிடுகிறது. சிலர் அவ்வாறு சொல்லவும் செய்தார்கள். ஆனால் அவருடைய கண்டுபிடிப்போ அறுவை

சிகிச்சையில் புரட்சியை உண்டுபண்ணியது. அறுவை மருத்துவர்களால் இப்போது உடலில் கத்தியை வைக்காமலேயே உள்ளுறுப்புகளைக் காண முடியும்.

## நோய்களை முறியடித்தல்

காலங்களாகவே பெரியம்மை போன்ற தொற்று வியாதிகள் மீண்டும் மீண்டும் பரவலாகத் தொற்றி பயத்தையும் மரணத்தையும் விளைவித்தன. ஆர்ராஸீ என்ற ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த பெர்சியர், அந்த சமயத்திலிருந்த இஸ்லாமிய சமுதாயத்தின் பிரசித்திபெற்ற மருத்துவர் என சிலரால் கருதப்பட்டார்; பெரியம்மையைப் பற்றி மருத்துவ ரீதியில் தெளிவான விளக்கத்தை முதன் முதலில் எழுதியவர் அவரே. ஆனால் நூற்றாண்டுகளுக்குப் பின்பே, அதை குணப்படுத்தும் வழியை பிரிட்டிஷ் மருத்துவர் எட்வர்ட் ஜென்னர் கண்டுபிடித்தார். பசுக்களுக்கு உண்டாகும் தீங்கிழைக்காத நோயாகிய மாட்டம்மை ஒருவரை தொற்றியபோது பெரியம்மை நோய்க்கான எதிர்ப்பு சக்தி அவருக்கு கிடைத்தது என ஜென்னர் குறிப்பிட்டார். இந்த ஆய்வின் அடிப்படையில், ஜென்னர் பெரியம்மை நோயைக் குணப்படுத்தும் தடுப்பு மருந்தை தயாரித்தார்; அதாவது, மாட்டிற்கு அம்மை தொற்றியிருந்த தோல் பகுதியிலிருந்த ஒருவித நீரை எடுத்து அம்மருந்தை தயாரித்தார். 1796ல் அவர் இதைச் செய்தார். தனக்கு முன்னிருந்த புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கு ஏற்பட்ட அதே கதிதான் இவருக்கும் ஏற்பட்டது. ஜென்னரை மக்கள் கண்டனம் செய்து எதிர்ப்பு தெரிவித்தனர். தடுப்பு மருந்து சம்பந்தமான அவரது கண்டுபிடிப்பு, அந்நோயை முற்றிலுமாக நீக்குவதற்கும் மருத்துவத் துறையில் அதைவிட சக்திபடைத்த புதிய மருந்தை கண்டுபிடிப்பதற்கும் வழிவகுத்தது.

பிரெஞ்சுக்காரரான லூயி பாஸ்டர், ரேபீஸ் மற்றும் ஆன்த்ராக்ஸ் நோயை குணப்படுத்த தடுப்பு மருந்தை பயன்படுத்தினார். நோய்க்கு முக்கிய காரணம் கிருமிகளே என்பதையும் அவர் நிரூபித்தார். 1882ல் ராபர்ட் கோச் என்பவர் காசநோயை உண்டுபண்ணும் கிருமியைக் கண்டுபிடித்தார். “பத்தொன்பதாம் நூற்றாண்டின் மிகப் பெரிய கொலையாளி” என சரித்திராசிரியர் ஒருவர் அந்நோயை விவரித்தார். ஓர் ஆண்டுக்குப்பின் காலரா தொற்றுவதற்குக் காரணமான கிருமியையும் கோச் கண்டுபிடித்தார். லைஃப் என்ற பத்திரிகை இவ்வாறு கூறுகிறது: “நுண்ணுயிரியலில் பாஸ்டர் மற்றும் கோச் அறிமுகப்படுத்திய கண்டுபிடிப்புகள் தடுப்பாற்றலியல், சுகாதாரம், உடல் நலம் பேணல் போன்றவற்றிலும் முன்னேற்றங்களுக்கு வழிவகுத்துள்ளன. கடந்த 1,000 வருடங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களைக் காட்டிலும் இந்தக் கண்டுபிடிப்புகளே மனிதரின் ஆயுட்காலத்தைக் கூட்டுவதற்கு பெரிதும் உதவியிருக்கின்றன.”

## இருபதாம் நூற்றாண்டு மருத்துவம்


இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், மருத்துவத் துறை இந்தக் கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் புகழ்பெற்ற மருத்துவர்களின் தோள்களிலேயே ஏறி நின்றதை காண முடிந்தது. அது முதற்கொண்டு மருத்துவத்துறையில் மிக வேகமான வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. நீரிழிவு நோய்க்கு இன்சுலின், புற்று நோய்க்கு கீமோ தெரப்பி, சுரப்பிகள் சம்பந்தப்பட்ட கோளாறுகளுக்கு இயக்குநீர் சிகிச்சை (hormone treatment), காசநோய்க்கு ஆன்டிபையாட்டிக்ஸ், சில வகை மலேரியாவுக்கு க்ளோரோக்வின், சிறுநீரகக் கோளாறுகளுக்கு டயலிசிஸ், அதோடு திறந்த இருதய அறுவை சிகிச்சை மற்றும் மாற்று உடலுறுப்புகளை பொருத்துதல் போன்றவை சில எடுத்துக்காட்டுகளே.

ஆனால் இப்போது நாம் 21ம் நூற்றாண்டின்

வாயிலில் அடியெடுத்து வைத்திருக்கிறோம். "உலகிலுள்ள அனைவருக்கும் போதுமான அளவு ஆரோக்கியத்திற்கு" உத்தரவாதம் அளிக்கும் இலக்கை மருத்துவத் துறை எந்தளவுக்கு எட்டியுள்ளது?

### இலக்கு கைமீறிவிட்டதா?

எட்டாக் கனிகள் அனைத்தையும் நண்பர்களுடைய தோளில் ஏறி பறிக்க முடியாது என்பதை சிறுவர்கள் கற்றுக் கொள்கிறார்கள். மரத்தின் உச்சியில் இருக்கும் நன்கு பழுத்த கனிகளில் சில இன்னும் எட்டாத உயரத்திலேயே இருக்கின்றன. அவ்வாறே மருத்துவத் துறையும் சாதனைக்கு மேல் சாதனை படைத்து முன்னேறியிருக்கிறது. ஆனால் எல்லாருக்கும் நல் ஆரோக்கியம் என்ற மிக முக்கியமான இலக்கு மரத்தின் உச்சியில் எட்டிப் பிடிக்க இயலாத நிலையிலேயே இருக்கிறது.



ஆகவே, 1998ல் ஐரோப்பிய செயற்குழு, "ஐரோப்பியர்கள் ஒருபோதும் நீண்ட ஆயுளோடு ஆரோக்கியமாக வாழவில்லை" என அறிக்கை செய்தது. அது மேலும் இவ்வாறு கூறியது: "ஐந்து பேரில் ஒருவர் 65 வயதுக்கு முன்பாகவே இறந்து விடுவார். இந்த இறப்புகளில் சுமார் 40% புற்றுநோயாலும் 30% இதய இரத்த நாளம் சம்பந்தப்பட்ட நோய்களாலும் ஏற்படும்.... புதிய நோய் அச்சுறுத்தல்களுக்கு எதிராக தகுந்த பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும்."

காலரா, காசநோய் போன்ற தொற்று நோய்கள் அதிக அச்சுறுத்தலையே ஏற்படுத்துகின்றன என ஜெர்மன் உடல்நல பத்திரிகையான கெஸுன்ஹைட் நவம்பர் 1998ல் அறிக்கை செய்தது. ஏன்? ஆன்டிபையாடிக்ஸ் "அவற்றின் வலிமையை இழந்து விடுகின்றன. அதிகமதிகமான பாக்டீரியாக்கள் ஒரு மருந்தையாவது எதிர்க்க வல்லன; சொல்லப்போனால் அநேக பாக்டீரியாக்கள் பல மருந்துகளை எதிர்க்கும் சக்தி படைத்தவை." ஒரு காலத்தில் இருந்த வியாதிகள் மீண்டும் தலைதூக்குவது மட்டுமின்றி எய்ட்ஸ் போன்ற புதுவித வியாதிகளும் உருவெடுத்துள்ளன. புள்ளியியல்'97 (ஆங்கிலம்) என்ற ஜெர்மன் மருந்தியல் வெளியீடு நமக்கு இவ்வாறு நினைப்பூட்டுகிறது: "அறியப்பட்ட வியாதிகளில் சுமார் 20,000 வியாதிகளில் மூன்றில் இரண்டு பாகத்தை தடுப்பதற்கு சிகிச்சையே இல்லை."

மரபணு சிகிச்சை பரிகாரம் அளிக்கிறதா?



வியாதிகளைக் குணப்படுத்த முடியும்” என ஹைலன் மீட் கேனன் (ஜீன்களைக் கொண்டு சுகப்படுத்துதல்) என்ற புத்தகம் குறிப்பிடுகிறது.

காலப்போக்கில், பிறவியிலேயே இருக்கும் பரம்பரை நோய்களை உடையவர்களுக்கு அவற்றை குணப்படுத்துவதற்கு ஏற்ற ஜீன்களை ஊசிமூலம் உட்செலுத்தி குணப்படுத்த முடியும் என விஞ்ஞானிகள் நம்புகிறார்கள். அதன் மூலம் புற்று நோய் செல்கள் போன்ற தீங்கிழைக்கும் செல்களைக்கூட சுயமாய் அழித்துவிடலாம். ஒருவரின் இயல்பை வைத்தே குறிப்பிட்ட நோய்கள் அவருக்கு வரும் சாத்தியத்தை கண்டுபிடிக்கும் மரபணு ஆய்வு முறை ஏற்கெனவே வழக்கில் உள்ளது. அடுத்து சாதனை படைக்கப் போவது ஃபார்மகோஜெனோமிக்ஸ் நோயாளியின் மரபுவழிப் பண்பியலுக்குத் தக்கவாறு மருத்துவ சிகிச்சை அளிப்பது.

புதுப் புது சிகிச்சை முறைகள் அதிகரித்து வருவது உண்மைதான். உதாரணமாக, மரபணு பொறியியல் சிறந்த ஆரோக்கியத்திற்கு திறவுகோலாக அமையலாம் என பலர் நினைக்கிறார்கள். 1990களில் டாக்டர் டபிள்யூ. ஃபிரென்ச் ஆன்டர்ஸன் போன்ற மருத்துவர்களால் ஐக்கிய மாகாணங்களில் நடத்தப்பட்ட ஆய்வுக்குப்பின், மரபணு சிகிச்சையே “மருத்துவ ஆராய்ச்சியில் கொடிகட்டிப் பறக்கும் புதிய அம்சம்” என வருணிக்கப்பட்டது. மரபணு சிகிச்சையைக் கொண்டு “மருத்துவ விஞ்ஞான முன்னேற்றத்தின் உச்சிவரை செல்ல இயலும்; குறிப்பாக, இதுவரை குணப்படுத்த முடியாமல் இருக்கும்

மருத்துவர்கள் ஒரு நாள் கண்டிப்பாக “தங்கள் நோயாளிகளின் நோய்களைக் கண்டறிந்து குணப்படுத்துவதற்காக டிஎன்ஏ மூலக்கூறின் பொருத்தமான பகுதியை அவர்களுக்கு அளிப்பார்கள்” என பிரபல ஆய்வாளர் ஒருவர் குறிப்பிடுகிறார்.

இருந்தாலும், இந்த மரபணு சிகிச்சையை வருங்காலத்தின் “அற்புத குணமளிக்கும்” நிவாரணி என எல்லாரும் நம்புவதில்லை. ஆய்வுகள் காட்டுகிறபடி, மக்கள் தங்கள் மரபுவழி பண்பியலை ஆராய்வதை விரும்புகிறதில்லை. மரபணு சிகிச்சை இயற்கையோடு விளையாடும் ஆபத்தான செயலாக இருக்கலாம் எனவும் நினைத்து

பலர் பயப்படுகிறார்கள்.

மரபணு பொறியியலோ மருத்துவத் துறையில் ஏற்பட்டுள்ள மற்ற விஞ்ஞான முன்னேற்றங்களோ அவர்கள் அள்ளி வீசிய வாக்குறுதிகளை காப்பாற்றுமா இல்லையா என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம். என்றாலும், அளவுக்கு மிஞ்சி எதிர்பார்ப்பதை தவிர்ப்பதற்கு தகுந்த காரணம் உள்ளது. த க்ளே பெடஸ்டல் என்ற புத்தகம் பழக்கமாக நடந்துவரும் ஒரு சுழற்சியை பற்றி இவ்வாறு வருணிக்கிறது: “ஒரு புதிய சிகிச்சை முறை அறிமுகப்படுத்தப்பட்டவுடன் மருத்துவ கூட்டங்களிலும் பத்திரிகைகளிலும் அதைப் பற்றி ஆகா ஓகோ என்று புகழ்கிறார்கள். அதைக் கண்டுபிடித்தவர்கள் அத்துறையில் பிரபலமாகிறார்கள், செய்தி துறையினர் அந்த முன்னேற்றங்களை புகழ்ந்து பாராட்டுகிறார்கள். சிறிது காலத்திற்கு அதன் புகழ் அலைகள் எங்கும் அடித்து, அப்புதிய சிகிச்சைமுறைக்கு ஆதாரப்பூர்வ சான்றுகளை அளித்தபின், அந்த அலைகள் படிப்படியாக ஓய்ந்து விடுகின்றன. அவை சில மாதங்களுக்கு அல்லது சில பத்தாண்டுகளுக்கு மட்டுமே நிலைத்திருக்கின்றன. அடுத்து புதிய நிவாரணி கண்டுபிடிக்கப்பட்டு விரைவில் பிரபலமாகிறது; இது பழைய சிகிச்சை முறையை மாற்றி அதை ஒன்றிற்கும் உதவாததாக்கி விடுகிறது.” சொல்லப்போனால், பயனற்றவையாக பெரும்பாலான மருத்துவர்களால் புறக்கணிக்கப்பட்டிருக்கும் அநேக சிகிச்சை முறைகள் சமீப காலம் வரை தரமான சிகிச்சை முறையாக வழக்கில் இருந்து வந்தவையே.

பூர்வ கால சுகமளிப்பவர்களைப் போன்று இன்றைய மருத்துவர்கள் கடவுளாகப் போற்றப்படுவதில்லை. இருந்தாலும், மருத்துவர்களை கடவுளாக பாவிக்கும் மனப்போக்கும் விஞ்ஞானத்தால் கண்டிப்பாக மனிதரின் நோய்களை குணப்படுத்த முடியும் என்ற நம்பிக்கையும் சிலர் மத்தியில் காணப்படுகிறது. ஆனால் இலக்கை அடைய முடியவில்லை என்பதே நிஜம். நாம் ஏன், எப்படி முதுமையடைகிறோம் (ஆங்கிலம்) என்ற புத்தகத்தில் டாக்டர் லெனர்ட் ஹேஃப்லிக் இவ்வாறு கூறுகிறார்: “ஐக்கிய மாகாணங்களில் 1900-ல் 75 சதவீதத்தினர் அறுபத்து ஐந்து வயதை எட்டுவதற்கு முன்பே இறந்துவிட்டனர். இன்று இந்தப் புள்ளி விவரம் தலைகீழாக மாறிவிட்டது: சுமார் 70 சதவீதத்தினர் அறுபத்து ஐந்து வயதிற்குப் பின்பே மரிக்கிறார்கள்.” ஆயுட்காலம் இந்தளவுக்கு அதிகரிப்பதற்கு காரணம் என்ன? “புதிதாகப் பிறக்கும் குழந்தைகளின் இறப்பு குறைத்திருப்பதே இதற்கு பெரிதும் காரணம்” என ஹேஃப்லிக் விளக்குகிறார். இப்போது ஒருவேளை மருத்துவ விஞ்ஞானத்தால் முதியோரின் மரணத்துக்கு முக்கிய காரணமான இருதய நோய், புற்றுநோய், பக்கவாதம் போன்றவற்றை முற்றிலும் நீக்க முடிவதாக வைத்துக்கொள்ளுங்கள். சாவாமை எனும் வரத்தை அளிக்க முடியும் என இது அர்த்தப்படுத்துமா? நிச்சயமாகவே இல்லை. “அநேகர் நூறு ஆண்டுகளுக்கும்கூட வாழ முடியும்” என குறிப்பிடும் டாக்டர் ஹேஃப்லிக் மேலும் இவ்வாறு சொல்கிறார்: “ஆனாலும் நூறு வயதை எட்டியவர்கள் சாகாமல் இருக்க மாட்டார்கள். ஆனால் என்ன காரணத்தினிமித்தம் அவர்கள் மரிப்பார்கள்? அவர்கள் மரணம் வரையாக நாளுக்கு நாள் பலவீனமடைவதாலேயே.”

மருத்துவ விஞ்ஞானத்தின் அபார சாதனைகள் ஒருபுறமிருக்க, மரணத்தை ஒழிப்பது என்பது இன்னும் எட்டாக் கனியாகவே இருக்கிறது. ஏன் அப்படி? எல்லாருக்கும் நல் ஆரோக்கியம் என்ற இலக்கு வெறும் பகற்கனவுதானா?

# எனது கனவு நனவாகிறது

இலண்டனில் ஒரு சிவாலயம் அமைக்கவேண்டும் என்று இலண்டனுக்கு நான் வந்த நாளிலிருந்து நினைத்ததுண்டு. சிவனை முழுமுதற் கடவுளாக வழிபடுவது என் வழக்கம் என்பதால் அந்த எண்ணம் தோன்றியிருக்கலாம். எனது ஆசை விரைவில் நிறைவேறியது. அன்பர்கள் சிலரின் முயற்சியால் லூயிலீம் என்ற இடத்தில் ஒரு சிவன் கோயில் கட்டப்பட்டபோது நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. ஆனால் அந்த மகிழ்ச்சி பலகாலம் நீடிக்கவில்லை. கோயிலின் அமைப்பில் ஏற்பட்ட சில தவறுகள் என் மனதுக்குப் பிடிக்கவில்லை. இதனால் நான் வெளியிடும் தகவல் பத்திரிகையில் பலமுறை இந்தக் கோயிலிலிலுள்ள குறைகளை எழுதிவந்துள்ளேன். அதனால் சிலருக்கு நான் ஒரு விரோதியாகவும் தெரிந்தேன். இந்தக் கோயிலுக்குத் துவாரபாலகர்கள் இல்லை என்பது அப்படி நான் எழுதிய பல குறைகளில் ஒன்று. பல வருடங்களாக நான் திரும்பத் திரும்ப எழுதியவை எல்லாம் காட்டிலே பெய்த மழைபோல ஒரு பயனும் இல்லாமற்போயின.

அப்படித்தான் நான் சமீப காலம்வரை நினைத்தேன். ஆனால், அண்மையில் ஒரு நாள், துவாரபாலகர்களை வருவித்து, கோயில் வாசலில் நிறுவப்போகிறார்கள் என்ற தேனான செய்தி என் காதுக்கு வந்தது. இந்த விளம்பி வருடத்தில், சித்திரை மாதம், இருபத்து இரண்டாம் திகதி இந்தச் சிறப்பான வைபவம் நடைபெற இருக்கிறது. இந்தப் புனிதமான கைங்கரியத்தை கடமைபோலத் தன் கவனத்தில் எடுத்து நிறைவேற்றுபவர் சிவன்கோயில் அறக்கட்டளையில் தலைவராகப் பதவி வகிக்கும் திரு சிறீஸ்கந்தராசா அவர்கள். நான் தவறைச் சுட்டிக் காட்டியபோது, அதைச் சீர்தூக்கிப் பார்த்து, தவறு என்று உணர்ந்தவுடன், அதைத் தட்டிக்கழிக்காது பொறுப்புடன் செயற்பட்டு இந்தத் திருப்பணியை அவர் நிறைவேற்றுகிறார். அப்படிச் செய்வதற்கு ஒரு நல்ல மனம் வேண்டும். அது அவரிடம் இருக்கிறது. அவரை நான் பாராட்டுகிறேன்.

நடக்குமோ நடக்காதோ என்று நான் ஏங்கிய நாள்கள் பல கடந்துபோனாலும் இப்போது அந்தத் திருப்பணி நிறைவேறுகிறது என்று அறியும்போது மனம் மிகவும் மகிழ்கிறது. என் கனவு நனவாகிறது.

(சிறுகதை)

# நவஜோதி ஜோகரட்னம்

லண்டன்



இப்பதான் லண்டனில் பல்கலைக்கழகத்தில் படித்து பட்டதாரியாகி வந்திருக்கிறான் அஜுன். ஏதோ அமேசனில் புத்தகம் புத்தகமாக வாங்கிப் படித்துக்கொண்டும்தான் இருக்கிறான். ஏதும் கதைக்கப்போனால், 'லீவ் மி எலோன்' என்று தாயைத் தனது அறைக்கு வெளியே போகச்;சொல்லி கதவைச் சாத்துகிறான். பல்கலைகழகம் முடித்தவுடன் தான் வளர்ந்து மச்சுவேர்ட் ஆகிவிட்டான் என்ற நினைப்பு அஜுனுக்கு. அதிகம்; வாசித்துவிட்டான் போல இருக்கு. என்னத்தைத் தொட்டுக் கதைத்தாலும் சரியாகப் பதில் சொல்கிறான். தொழில் நுட்பத்தால் பிள்ளைகள் நல்லாக வாசித்துத் தள்ளுதுகள். அவர்களுக்கு எங்களைவிட கூடத்தான் உலக அறிவு. வாழ்க்கையைச் செப்பனிட்டு வளப்படுத்தி பிள்ளைகளின் முன்னேற்றத்திற்காக எதிர்பார்ப்பில்லாமல் தங்களை அர்ப்பணிப்பவர்கள்தான் இந்தத் தாய்மார்கள். அமீனா தன் மகன் அஜுனின் எதிர்காலம் பற்றித்தான் கனவு. அவன் மேலும் படித்து ஒரு பெரிய அறிவாளியாக வேண்டும் என்பதே அமீனாவின் மனப்பிராந்தியத்தில் பரவிக்கொண்டிருந்தது.

சின்ன வகுப்புகள் படிக்கும்போது ஏதும் பெற்றோர் அறிவுரை சொன்னால் பிள்ளைகள் கொஞ்சம் கேக்குதுகள்.



# அது வேறு உலகம்

வளர வளரத் தாங்கள்தான்; அறிவாளிகள் என்றமாதிரித்தான் கதைக்குதுகள். அதில் உண்மையும் இல்லாமலில்லை.

மதுரம் சொட்டும் குரலால் எப்போதும் மகன் அஜுனுடன் அமீனா பேசிக்கொள்வாள்.

காலையில் இருந்து கொண்டே கணணிக்கு முன்னால்தான் சத்தியாக்கிரகம் செய்ததுமாதிரி எந்த நேரமும் தட்டிக்கொண்டிருக்கிறான். இடைக்கிடை லண்டனில் உள்ள 'மைக்கேல் மக்ளின்ரயல்' 'ஸ்ரீபன் ஜோன் ஃபிறை' போன்ற பகிடிக்காரர்களின் பகிடிகளைக்கேட்டுக் குலுங்கிக் குலுங்கித் தனியவே இருந்து சிரித்துக்கொள்கிறான். இப்போ கணணிதான் உலகம் மாதிரி பிள்ளைகளுக்கு. அதற்குள்ளேயே ஊர்ந்துகொண்டிருப்பதைப் பார்க்கும்போது என்ன அஜுன் வேலை ஒண்டும் தேடாமல் இருக்கிறானோ! என்று மனதிற்குள் அங்கலாய்த்துக்கொண்டிருப்பாள் அமீனா. 'பாவம் அவனுக்கு ஏற்றமாதிரி ஒரு வேலையும் வாய்க்கவில்லைப்போல்' என்று மனதுள் வேதனைப்படுவதுண்டும் அமீனா. எது எது எப்போது நடக்கவேண்டுமோ அவ்வப்போது நடந்தே தீரும். நண்பி கூறும் தத்துவம்போல் எல்லாம் நல்லாக

அமையும் என்பது அமீனாவின் நம்பிக்கை.

மனித வாழ்வில், ஏன் அவளின்; பிரத்தியேக வாழ்வில் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வேதனையும் ஏக்கமும் ஏமாற்றமுமே இலை மறை காய்போலப் பதுங்கிக் கிடக்கின்றன என்ற மகத்தான உண்மையை அமீனா எப்போதோ அறிந்து விட்டாள். சோகத்தின் கருமையினைக் கொண்டு வர்ணம் தீட்டியதுபோல் வானம் இருண்டு கிடக்கிறது. கலகலப்பு இல்லாது சுமாராக நகருகின்றது அவளது வாழ்வு. வாழ்க்கை அவளுக்கு முடிவும் தொடக்கமுமற்ற நெடுங்கதையாய் காட்சி தருகிறது. அவ்வப்போது சிதறிச் சிதறி அலைகளாய் அவள்; மீது மோதுவதுமுண்டு. சிறுவயதில் தன் பெற்றோரோடு வாழ்ந்த பருவமும், தன் தந்தையோடு சலசலத்துச் சுற்றித் திரிந்த நாட்களும்தான் எந்நேரமும் கனவாகி நினைவில் அவளுக்குப் படமாகிப் போய்க் கொண்டிருக்கும். வாழ்க்கை எண்ணமாய், இலட்சியமாய், கற்பனையாய் கனவாகிப்போகும் ஒரு புதிர்போலத்தான் அவளுக்குத் தென்படுகிறது. அஜுனின் அன்பும் அதட்டலும்தான் அவளுக்கு இப்போ ஆறுதலாக இருக்கிறது. மாலையாகிவிட்டது சாளரத்தின் ஊடாக கண்களை ஊசிமுனைகள்போல் உறுத்தி நிற்கும் வெளியை நோக்கினாள் அமீனா. உலகத்திலுள்ள சோகம் அத்தனையையும் உருவாக்கி வார்த்துவிட்ட மௌனச் சிலைகள்போல் எல்லாமே அவளுக்குப் புலப்பட்டது.

அஜுனின் அழைப்பு அவன் அறையில் இருந்து கொண்டு...

அம்மா....

என்ன அஜுன்? அம்மா எனக்கு ரீ போட்டுத்தருவீங்களா? அல்லது கான் ஐ ஹாஃவ்; எ பிளேற்? என்று அமீனாவிடம் கேட்பதுதான் வழக்கம். என்ன இன்று வழக்கத்திற்கு மாறாக வித்தியாசமான குரலில்.

'உங்களுக்கு என்ன சாப்பாடு விருப்பம் அம்மா? ரேக் எவேயில் சைனிஸ் சாப்பாடு ஓடர் கொடுக்கப்போகிறேன்' என்று அன்பு ததும்பக் கேட்டான்.

இன்று மார்ச் பதினொராம் நாள். தாய்மார்கள் தினத்தைக் கொண்டாடிக்கொண்டு பரிசுகள் வேண்டித் தாய்மார்களுக்கு கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று தொலைபேசி அழைப்புகளும் தொலைக்காட்சிகளும்; விளம்பரப்படுத்திக்கொண்டிருக்கிறது. இது ஒரு போலிச் சம்பிரதாயம். வர்த்தகர்களின் புதுபுதுக் கண்டுபிடிப்புகள் என்று அமீனா எண்ணிக்கொண்டிருக்கும்போதே.

அழகான சொக்ளேற்றின் ஒன்றைக் கொண்டுவந்து நீண்டினான் அஜுன்.

எதற்கு இவைகள்? என்ற தோறணையில் அவனைப் பாலீக்கின்ற அமீனாவுக்கு.

அம்மா உங்களுக்கு என்ன படம் பிடிக்கும்? 'அருவி' என்ற ஒரு தமிழ்ப் படம் பல விருதுகளைப் பெற்றது என்று என் நண்பன் சொன்னான். பார்ப்போமா? அவளின்; மனதை மாற்றி அஜுன் மகிழ்ச்சிப்படுத்த நினைக்கும் செயலை வரவேற்றாள் அமீனா. ஆங்கில விளக்கத்தை அளிக்கும் ரைற்றிலையும் ஒழுங்கு செய்தான் அஜுன்;. தாயும் மகனும் அருவியை பார்க்கத்தொடங்கினார்கள். இருவரும் படத்தைப் பார்த்து முடிந்ததும், அஜுன்..

'எப்படிப் படம் அம்மா?' என்று கேட்டான்.

நடிப்பு பாத்திரங்களுக்கு ஏற்ப நன்றாக உள்ளது. எடுத்துக்கொண்ட விடயம் அதாவது கரு நல்ல விடயத்தை கூறுவதாக உள்ளது. ஆனால் கதை சொல்லும் முறைதான் யதார்த்தத்திற்கு அப்பாற்பட்டது என்றாள் அமீனா.

'தமிழ்ப் படங்கள் எதுதான் அம்மா யதார்த்த வாழ்வைச் சித்தரிக்கின்ற மாதிரி கதையை நகர்த்திச் செல்கின்றது? ஒரு படம்

என்று நினைத்துக்கொண்டு பார்க்கவேண்டும் அம்மா' என்று சட்டென்று சொன்னான் அஜுன்.

தமிழ் படங்களே பார்க்காத அஜுன் எப்படி இதனைக் கூறுகின்றான் என அமீனா எண்ணிக்கொண்டாள். அவனின் நண்பன் கோபிதான் குறும்படங்கள் எடுப்பதில் ஆர்வம் மிக்கவன். லண்டன் பி.பி.சி. நடாத்திய குறும்படப் போட்டியில் வெற்றி பெற்று பரிசும் பெற்றுக் கொண்ட தமிழ்ப் பொடியன். கோபியுடன் சேர்ந்து தமிழ்ப் படங்கள்; எல்லாம் பார்க்கின்றவன் போல் இருக்கிறது. வித்தியாசமான சிந்தனைதான்.

வாழ்க்கை என்பது அழகுணர்வில் வளர்வதுதானே! அழகுணர்வே ஆளுமையின் முழுமையாகி வெளிவருவது. அழகுணர்வு என்பது மனித உள்ளத்தின் வெளியீடு. அத்தகையதொரு வெளிப்பாட்டிலத்தான்; அஜுனும் படைப்பாற்றல் மிக்கவனாக அமீனாவுக்குத் தெரிந்தான். ஓவியக் கலைகூட கற்பனையால் ஒழுங்குபடுத்தப்பட்டு உருவம் கொடுக்கின்ற ஒரு கலையாகின்றது. இவையெல்லாம் அழகுணர்வை சுவைப்பவனுக்குத்தான் ஏற்படுகின்றது. பல்கலைகக்கழகம் முடித்து வந்ததும் உடனடியாக வேலை கிடைத்து ஒரு திருமணத்தைக்கண்டு அவனை ஒரு குடும்பமாக்கிவிட எத்தணிப்பவள் அல்ல அமீனா. ஆனால் இப்போ அவனுக்கு ஒரு கதையையும் சொல்லமுடியாமல் தத்தளிப்பவளாகத்தான் தெறிக்கின்றாள்.


அமீனாவின் நண்பி ஒருவரின் மகன் லண்டன் கேம்றிச் பல்கலைக்கழகத்தில் தனது பட்டப்படிப்பை மேற்கொண்டு பட்டதாரியாகி வெளிவந்த செய்தி மகிழ்வைக் கொடுத்தது. ஆனால் அவன் இப்போ வீட்டுக்குள்ளேயே முடங்கியிருந்தவண்ணம் வீட்டுப் பொருட்களை அடிச்சு நொருக்குவதாகக் கேள்விப்பட்டு மனம் உடைந்தாள் அமீனா. பெற்றோர்கள் பிள்ளைகளுக்குக் கூடுதலான மனஅழுத்தத்தைக் கொடுப்பதால்த்தானோ என்னவோ இப்படி ஆகிவிடுகின்றது என எண்ணத்தோன்றுகின்றது.

லண்டனில் மிகச் சிறந்த பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்ற ஒரு மாணவனுக்கு தனது எதிர்காலத்தை எப்படி வளப்படுத்தி வாழவேண்டும் என்று தெரியும்தானே!. அவர்களுக்கு பெற்றோர் அறிவுரை வழங்கத்தேவையில்லை. ஆனால் 'எங்கள் போன்றவர்கள் தாய்மார்கள் என்ற எண்ணத்தில், எங்களுடைய மனம் கேட்காது. வாயைச் சும்மா வைத்துக்கொண்டு இருக்காமல் ஏதாவது பிள்ளைகளுக்குச் சொல்லி புறுபுறுத்து உள்ளதையும் கெடுத்துப்போடுவம்' என்று அமீனா எண்ணுகின்றாள். இனிமேல் அஜனுக்கு ஒன்றுமே கூறக்கூடாது என்று எண்ணுகின்றாள். அவன் சிறந்த புத்திசாலி. அவனாகவே தன்வாழ்வின் இலட்சியங்களையும் உண்மைகளையும் உணர்ந்துகொள்ள, வழிவகைகளைத் தேட விட்டுவிட வேண்டும் என எண்ணுகின்றாள் அமீனா.

புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் நாம் என்ன நேர்மையான முறையில் அவர்களுக்குச் சொல்லுகின்றோமா? கிடையவே கிடையாது. பிள்ளைகளின் திறமைகள் அல்லது உள உடல் சமூக முதிர்வுக்கு ஏற்றமாதிரி நாங்கள் நடத்துகிறோமா? இப்படியான பல கேள்விகள் அமீனாவின் உள்ளத்தில் உதிர்ந்து கொண்டிருந்தது. நமது பண்புகளைக்கொண்டே நாம் பிள்ளைகளின் பண்புகளை விளங்கிக்கொள்ள முனையும்போது எல்லாமே அகவயமாகிப் போகின்றதே. நாங்கள் தான் ரோல் மொடேல் அவர்களுக்கு. முதலில் நாங்கள் சமூகத்தில் நல்ல பிரஜைகளாக இருக்க வேண்டும் என்று அமீனாவின் உள்ளம் சிந்தித்துக்கொண்டே இருந்தது.

திரும்பவும் அஜுனின் குரல். அம்மா.

என்ன அஜுன்?



நாளை என்னுடைய பல்கலைக்கழக நண்பி வீட்டுக்கு வந்து ஒரு நாள் தங்க வேண்டி இருக்கு அம்மா?

என்ன அஜுன். அந்தப் பெண் பிள்ளைப் பிள்ளை வந்தால் தங்குவதற்கு வீடு வசதி இல்லை. உனது அறையும் எமது அறையும் தானே இருக்கிறது. எப்படி அஜுன் இரவில் அந்தப்பிள்ளையைத் தங்க வைப்பது?

என்ன அம்மா? எனது அறையில் இருக்கும் பங் பெட்டில் அவள் தூங்குவாள். எனது அண்ணா நித்திரை கொண்ட இடத்தில். இப்போ அண்ணா வெளிநாட்டில்தானே படிக்கிறார். படுக்கைவிரிப்புகளை மாற்றி ஒழுங்கு செய்தால் அவளுக்குப் போதும்.

என்ன அஜுன் சொல்கிறாய்? அதுவும் யாரோ ஒரு பொம்;பிளைப்பிள்ளை. எப்படி ஒரு அறையில் தங்குவது?

அவள் பல்கலைக்கழகத்தில் படித்த நண்பி. அவ்வளவு தான். ஏன் எனது அறையில் மேல் கட்டில் கீழ்கட்டில் என்று இருக்கும் பங் பெட் தானே அம்மா! தங்கினால் என்ன? என்னம்மா எந்த நூற்றாண்டில் வாழ்கின்றீர்கள்?

அம்மா நீங்க ஏன் பயப்பிடுகிறீங்கள் என்று எனக்குத் தெரியும். அவள் எனது ஒரு நண்பி மட்டும் என்று சொன்னேன் தானே! இன்னும் விளக்கமாகச் சொல்வதானால், அவள் ஒரு லெஸ்பியன் அம்மா. எங்களைப் போன்ற பொடியன்களை அவளுக்குப் பிடிக்காது அம்மா. இப்போது விளங்குகிறதா?



அமீனா ஆச்சரியத்தோடு விழித்தாள். பிள்ளைகள் இத்தகைய இருபால் உறவுகளை சமத்துவமாகவும் அவர்களின் ஓரினச் சேர்க்கைகளைக்கூட மிக இலகுவாக எடுத்துக்கொள்கின்றார்களே! வெளிநாடுகளில் இவை பகிரங்கமாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றது ஆனால் தமிழ் சமுதாயத்தில் இவை குறைவாக இருந்தாலும் எதிர்காலத்தில் எப்படி ஆகுமோ?

கையிலை கணணியைத் தட்டிக்கொண்டு அடிக்கடி மவுஸ்சால மாற்றுவதுபோல எண்ணங்களையும் அடிக்கடி மாற்றிக் கொள்ளுதுகள் தற்போதைய பிள்ளைகள். தங்களுக்கு மட்டும் ஏதாவது தேவையென்றால் வளைஞ்சு குழைஞ்சு கதைச்சு காரியத்தை சாதிக்குதுகள். இனியென்ன வாற பெண்பிள்ளைக்கு அறையை கொஞ்சம் வசதியாக்கி ஆயத்தப்படுத்த வேண்டிக்கிடக்கு என்று அமீனா மனதுள் தயாராகின்றாள். வீட்டுக்கு வரும் விருந்தினர்களை மனங்கொண்டு பௌவியமாக உபசரிப்பது அவளது இயல்பான பண்பு.

வாழ்க்கை எல்லாத்துறைகளிலும் இசைவும் இணைவும் கொள்ள வைக்கத்தான் செய்கிறது.

மீண்டும் கணணிக்குள் தலையைப் புகுத்திக்கொண்டு இருக்கிறான் அஜுன்.

அதற்கிடையில் வேறு என்னென்ன புரளிகளைக் கிளப்பிக்கொண்டு வரப்போகிறானோ அஜுன். புகைப்படக் கமராவை சுருக்கி விரித்துப்

பார்ப்பதுபோலத்தான் அஜுனையும் பல கோணங்களில் வைத்துப் பார்க்கவேணும். கண்ணால் பார்க்கின்ற சுயமான காட்சிபோல் ஒரு நாளுமே அஜுன் அமீனாவுக்குத் தெரிவதில்லை.

அம்மா?

என்ன அஜுன்?

இஞ்ச வாங்கம்மா.

என்னென்று சொல்லன்; அஜுன்?

வாற மாதம் முதலாம்திகதி தொடக்கம் வேலைக்குப் போகப்போறன்.

என்ன வேலை?

லண்டன் பிபிசி செய்திப்பிரிவில்.

லண்டனிலா?

லண்டனில் தான்.

என்ர பிள்ளை கெட்டிக்காறன். அமீனாவுக்கு கண்கள் பட படத்தன. பசுவும் கன்றும் ஒன்றை ஒன்று துரத்திக்கொண்டு மகிழ்வில் திளைப்பதுபோல் அமீனாவும் அஜுனும்...



**எஸ்.ரத்தினவேல்**
முதுநிலை தலைவர், தமிழ்நாடு

# தொழில் வணிக வளர்ச்சி அவசியம்

தமிழகத்தில், தொழில் வணிகத்தில் ஈடுபட்டுள்ளோர், அவர்களது குடும்பத்தினர் என, ஒரு கோடி வாக்காளர்கள் உள்ளனர். ஆறில் ஒரு ஓட்டு தொழில், வணிகத்துறை சார்ந்த ஓட்டு என்பதை, மறந்து விடக்கூடாது.

மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கும், வேலைவாய்ப்புகள் பெருகி, மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவும், மக்களின் கைகளில் பணப்புழக்கம் அதிகமாகி மகிழ்ச்சியுடன் வாழவும், தொழில், வணிகம் வளர்ச்சி காண வேண்டியது அவசியம்.

தொழில், வர்த்தகம் வளர்ச்சியடைய, மாநிலத்தில் தொழில்முனைவோர்



ஊக்கப்படுத்தப்பட வேண்டும். பிற மாநில, நாடுகளிலிருந்தும் தொழில் முதலீடுகள் அதிகம் வரக்கூடிய வகையில், தொழில் கொள்கை வகுக்கப்பட வேண்டும்.

தமிழகத்தில், தொழில் துவங்கி நடத்துவது எளிது. உரிய பாதுகாப்பு கிடைக்கும். குறு, சிறு தொழில்களில் ஈடுபட விரும்பும் முதல் தலைமுறை தொழில் முனைவோரை அரசு கைபிடித்து, சிரமம் தெரியாமல் வளர்ச்சி பாதைக்கு அழைத்து செல்லும் என்ற நம்பிக்கை, முதலீட்டாளர்களுக்கு ஏற்படும் வகையில், தமிழக அரசின் நடவடிக்கைகள் இருக்க வேண்டும்.

ஒரு நிறுவனம் எவ்வளவு விற்று முதல்

செய்கிறது என்பதை விட, எவ்வளவு பேருக்கு வேலை கொடுக்கிறது என்பது தான் முக்கியம். ஆர்வத்துடன் தொழில், வணிகம் துவங்க முன்வருபவர்களில் மிகச் சிலரால் தான், அரசின் தேவையற்ற கட்டுப்பாடுகளையும் பல்வேறு உரிமங்கள் பெறுவதில் உள்ள சிரமங்கள், கால தாமதங்கள், லஞ்ச லாவண்யங்கள் ஆகியவற்றையும் தாக்குப் பிடிக்க முடிகிறது.

பலர் சோர்வடைந்து வேலை தேடி செல்கின்றனர். புதிய புதிய மதிப்பு கூட்டப்பெற்ற பொருட்களை படைப்பாற்றலுடன் தயாரிக்கும் அறிவாற்றலும், திறனும் உள்ள இளைஞர்கள், தொழில் துறையில் ஈடுபடாமல் வேலை கிடைத்து, பிற மாநிலங்கள், வெளிநாடுகளுக்கு சென்று விடுகின்றனர். இதனால் ஆற்றல் மிகு இளைஞர்களின் சக்தியை இழக்கிறோம்.

வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கையில், புதிய முயற்சிகளில் பெரும் ரிஸ்க் எடுத்து, தங்கள் சேமிப்பு முழுவதையும் தங்கள் சொத்துக்களை ஈடாக வைத்து, வங்கியில் கடன் வாங்கியும் முதலீடு செய்கின்றனர். பலருக்கு வேலை வாய்ப்பு வழங்கி வாழ்வாதாரம் தருவதாக இருக்கின்றனர். தனியார் துறை வேலை வாய்ப்புகள் அளிக்காதபட்சத்தில், அரசால் அவ்வளவு பேருக்கும் வேலைவாய்ப்பு கொடுத்து விட முடியுமா?

தொழில் வணிக துறையினரும், இளம் தொழில் முனைவோரும் ஓட்டளிக்க விரும்புவது யாருக்கு?

ஈ தமிழகத்தில் மக்களை சந்தித்து குறைகளை கேட்கும் முதல்வரின் ஆட்சி

தங்கள் துறைகளில் முடிவுகளை எடுக்கும் அதிகாரம் பெற்ற அமைச்சர்களை கொண்ட ஆட்சி

அதிகாரிகளின் ஆதிக்கத்திற்கு இடம் தராத ஆட்சி

சம்பந்தப்பட்டவர்கள், அமைச்சர்கள், அத்துறை அதிகாரிகள் ஒரே மேஜையில் அமர்ந்து, பிரச்னைகளை விவாதித்து, உடனுக்குடன் தீர்வு காணும் நடைமுறையை கடைப்பிடிக்கும் ஆட்சி

மக்கள் கையில் கூடுதல் பணப்புழக்கம் இருக்கும்படி நிதி கொள்கைகளை அமலாக்கும் ஆட்சி

அரசின் மொத்த வரி வருவாய் ரூ.86,500 கோடியில் வணிக வரியாக, ரூ.65,000 கோடியை எந்தவித சம்பளமும் இன்றி வசூலித்து தந்து, தமிழக அரசை இயங்கச் செய்யும் தொழில் வணிகத் துறையினரை கலந்து பேசி, வரிச்சட்ட மாறுதல்களை அறிவிக்கும் ஆட்சி

பல்பொருள் சில்லரை வணிகத்தில், அந்நிய நேரடி முதலீட்டிற்கு எக்காரணம் கொண்டும் அனுமதி வழங்காத ஆட்சி

ஒரு வேளை உணவிற்கு மீனை கொடுப்பதை விட, மீன் பிடிக்கும் தொழிலை கற்று கொடுக்க வேண்டும் என்ற பழமொழியை நிறைவேற்றும் ஆட்சி

இந்த நம்பிக்கையை எந்தக் கட்சி அல்லது கூட்டணி ஏற்படுத்துகிறதோ, அதற்கு தான் தொழில் வணிக துறையின் ஓட்டுகள் மட்டுமல்லாமல், அவர்களை சார்ந்து இருப்போரின் ஓட்டுகளும் கிடைக்கும்.



# நமக்கு ஏற்ற உணவு எது?

மனிதன் மேல் நிலைக்குச் செல்ல முற்படும்போது, அவன் உணர்வுக்கு பெரிய உறுதுணையாக இருக்கிற கருவி உடல், உடலைப் பேணிப் பாதுகாத்தல் என்பது, ஆன்ம வளர்ச்சிக்கான அடிப்படைகளில் ஒன்று.

ஆரோக்கியம் என்பது இலட்சியமா?

மேலை நாடுகளைப் பொறுத்தவரை ஆரோக்கியம் என்பது ஏதோ அடைய வேண்டிய விஷயம் என்று கருதுகிறார்கள். ஆனால், உண்மையில் ஆரோக்கியம் நமக்குள்ளிருந்து இயல்பாக, எழுவது. அமெரிக்கர்கள் சிலர் தங்கள் ஊட்டச் சத்துக்கும், உற்சாகத்திற்கும், ஆரோக்கியத்திற்கும் மாத்திரைகளை நம்பி வாழ்க்கை நடத்துவதை நாம் பார்க்கிறோம்.

முழுமையாக பச்சைக் காய்கறிகளுக்குப் போவதன் மூலமாகவே, ஒருவர் யோகக்கலையில் சிறந்துவிட முடியாது.

காலை, மதியம், இரவு உணவுகளில் வைட்டமின் மாத்திரைகள் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றன. ஆனால், அதையே சரி என்று இந்தியர்கள் கொள்ள வேண்டிய அவசியமில்லை. அமெரிக்க நாட்டில் வசிக்கிற, ஏராளமான இந்தியர்கள் நன்கு பணிபுரிகிறார்கள். வெற்றிகரமாக இருக்கிறார்கள். அவர்கள் மாத்திரைகளை நம்பி வாழ்பவர்கள் இல்லை.

எனவே, மூன்று விஷயங்களை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். ஒன்று, மனித உடலமைப்புக்கு ஏற்ற உணவு எது? இரண்டாவது பிராண சக்தியை எடுக்கிற உணவு எது? பிராண சக்தியை தரவோ, பெறவோ செய்யாத சராசரி

உணவு எது? மூன்றாவது, சமைத்த உணவு நல்லதா? பச்சைக் காய்கறிகள் நல்லதா? இவையெல்லாம் இன்றும் கூட விவாதத்திற்கு உரியவையாகவே விளங்குகின்றன.

பொதுவாக, யோகம், தியானம் போன்ற துறைகளில் போகிறவர்கள் "நாங்களெல்லாம் பச்சைக்காய்கறிகள் தான் சாப்பிடுகிறோம்" என்று சொல்லிக் கொள்வதில் கொஞ்சம் பெருமை அடைவதும் உண்டு. ஆனால், முழுமையாக பச்சைக் காய்கறிகளுக்குப் போவதன் மூலமாகவே, ஒருவர் யோகக்கலையில் சிறந்துவிட முடியாது.

பச்சைக் காய்கறிகள், தானியங்கள் போன்றவை உங்கள் உடலுக்கு வேண்டிய சக்திகளை முழுமையாகத் தருபவை. அவற்றை உங்கள் உணவில் ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் சேர்த்துக் கொள்ளலாம். உதாரணத்திற்கு, நாளொன்றுக்கு 1000 கிராம் உணவு உட்கொள்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். அதில் 700 கிராம் சமைத்த உணவு, 300 கிராம் காய்கறிகள், மற்ற தானியங்களை பச்சையாக உட்கொள்ளுதல் என்றிருந்தால் அதிலே பயன் இருக்கும்.

பலபேர் வயிறுமுட்ட சாப்பிட்டு விட்டு அதற்கு மேல் பழங்கள், காய்கறிகள் என்று சாப்பிடுகிறார்கள். அதனால் எந்தப் பயனும் இருக்காது. உணவை உட்கொள்கிற அளவைக் குறைப்பது பொதுவாகவே நல்லது. 100% சமைத்த உணவு சாப்பிடுகிற நீங்கள் அதை 70% குறைத்து 30% பச்சைக் காய்கறிகள் சாப்பிடாமல் இருந்தால் கூட, அந்த 30% உணவு குறைகிறபோது, உங்கள் உடல் நலம் முன்னேற்றம் அடைவதைக் காண்பீர்கள். முடிந்தால் இரவு உணவு மட்டும் 100% பச்சைக்காய்கறிகளாக, தானியங்களாக சாப்பிடுவது நல்லது. அதில் பழங்கள் சாப்பிடுவதே ஒரு தனிக்கலை.

அசைவ உணவு முழுக்க செரிக்க ஏறக்குறைய 72 மணி நேரங்கள் ஆகும்.

சிலபேர் உணவு சாப்பிட்டதும் பழங்கள் சாப்பிடுகிறார்கள். பழங்கள் விரைவில் செரித்துவிடும். சமைத்த உணவு செரிப்பதற்கு தாமதமாகும். எனவே செரிமான முறையில் ஒரு சிறு குழப்பம் ஏற்படும். அத்துடன் இந்தப் பழத்தை சாப்பிட்ட பயனையும் நீங்கள் இழக்கிறீர்கள்.

சமைக்கப்படாத காய்கறிகள், பழங்கள், தானியங்கள் போன்றவற்றிற்கு என்ன சிறப்பு என்றால், அவை ஒருதுளி கூட வீணாகாமல் அவற்றின் முழு சக்தியை உங்களுக்குத் தருகின்றன. அவற்றை பிற உணவு வகைகளோடு சேர்த்து சாப்பிடுகிறபோது, அதன் ஊட்டத்தை உங்களால் பெறமுடிவதில்லை. அப்படியானால் எப்படி பழங்களை சாப்பிட வேண்டும்? காலை உணவு அருந்திவிட்டு வருகிறீர்கள். முற்பகல் 11.00, 11.30 மணியளவில் லேசாக பசி எடுக்கிறது என்றால் அப்போது தேநீர் அருந்துவதை விட, காப்பி அருந்துவதைவிட, பழங்கள் சாப்பிடலாம். அந்தப் பழங்கள் நன்கு செரித்து மீண்டும் பசியெடுக்கிற நேரம் உங்கள் மதிய உணவுக்கான நேரமாக இருக்கும். இதுதான் பழங்களை சாப்பிடுகிற முறை.

முழுக்க முழுக்க இயற்கை உணவுக்கு மாறி விட வேண்டும் என்று நான் சொல்லவில்லை. ஆனால், நீங்கள் உட்கொள்கிற உணவில் எது உங்களுக்கு பிராண சக்தியைத் தரும், எது உங்கள் பிராண சக்தியை எடுத்துவிடும் என்பதையெல்லாம் உரியமுறையில் தெரிந்து வைத்துக் கொண்டு, அந்த விழிப்புணர்வோடு உண்பது நல்லது.

மனித உடல், அசைவ உணவுக்கு ஏற்ற அமைப்பில் இல்லை. நீங்கள் உட்கொள்கிற அசைவ உணவு முழுக்க செரிக்க ஏறக்குறைய 72 மணி நேரங்கள் ஆகும். ஒரு துண்டு இறைச்சியை எடுத்து மேசை மேல் வைத்துவிட்டு போனால், ஒரு நாளைக்குள் அது எவ்வளவு அழுகி விடுகிறது என்பது உங்களுக்குத் தெரியும். அப்படியானால் உங்கள் உடலின் உட்பகுதியில் இருக்கிற உஷ்ண நிலையில் செரிமானமாகாத இறைச்சி உணவு 72 மணிநேரம் இருந்தால், அது எந்தவிதமான பலன்களை ஏற்படுத்தும் என்பதை நீங்களே தெரிந்து கொள்ளலாம்.

அரிசி உணவு நல்லதா?

பலர் அரிசி உணவு சாப்பிடுகிறார்கள்.


இதில் பச்சரிசி நல்லதா? புழுங்கல் அரிசி நல்லதா? என்றெல்லாம் சந்தேகங்கள் வரும். அரிசியைப் புழுங்க வைப்பது, வேக வைப்பது என்பது ஒரு பாதுகாப்பு முறை. அவ்வளவுதான். புழுங்கலரிசியை நான்கு வருடங்களுக்கு வேண்டுமானாலும் வைத்துக் கொள்ள முடியும். பழைய காலங்களில் பஞ்சம் ஏற்பட்டு விட்டால் என்ன செய்வது என்கிற அச்சத்தில் புழுங்கல் அரிசிகளை வைத்திருந்தார்கள். மற்றபடி இதில் பெரிய வித்தியாசம் இல்லை. நீங்கள் உட்கொள்கிற உணவின் அளவைப் பொறுத்துதான், அரிசி உணவிலிருந்து நன்மையோ, தீமையோ பெற முடியும்.

நன்மை தரும் கீரைகள்

ஆரோக்கியமான மனிதருக்கு 3 லிருந்து 4 மணி நேர உறக்கமே போதிய ஓய்வைத் தந்துவிடும்.

கீரைவகைகள் நார்ச்சத்து கொண்டவை, அவற்றை அளவோடுதான் உட்கொள்ள முடியும். ஏனெனில் அவற்றில் இருக்கிற பச்சையம், அவ்வளவு விரைவாக செரிக்கக் கூடியது அல்ல. சமைக்கப்படாத நிலையில் பச்சையம், அவ்வளவு சீக்கிரம் செரிக்காது. கீரைவகைகளைப் பக்குவப்படுத்தித்தான் உண்ண வேண்டும். நீங்கள் பார்த்திருக்க முடியும். நாய்கள், பூனைகள் போன்றவையெல்லாம் சில நாட்களில் சில புல் வகைகளை சாப்பிட்டு விட்டு, சிறிதுநேரம் கழித்து அவற்றை வாயில் எடுக்கும். இது தங்களுக்குள் இருக்கிற சளி, கொழுப்பு போன்றவற்றை வெறியேற்ற அந்த பிராணிகளுக்கு இயற்கை கற்றுத் தந்திருக்கிற முறை.

பாலும், தயிரும்...



எதைச் சாப்பிடுகிறீர்கள் என்றாலும் அது உங்களுக்கு ஏற்றதா? என்கிற விழிப்புணர்வு முதலில் தேவை. பால், தயிர் போன்றவைப் பற்றி நான் உங்களுக்கு அதிகம் சொல்ல வேண்டியதில்லை. அது மிகவும் ஆரோக்கியம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பசுவை "கோமாதா" என்று அழைக்கிறோம். பசுவை ஏன் மாதா என்று அழைக்கிறோம் என்றால் ஒரு குழந்தையை பெற்றுவிட்டு தாய் இறந்து விட்டாலும் கூட, அந்தக் குழந்தைக்கு பால் தருகிற தாயாக பசு இருக்கிறது. ஆனால் 2 அல்லது 2 1/2 வயது, வரையில் தான் பால் மற்றும் பால் சார்ந்த உணவு வகைகள் நமக்கு செரிக்கும். அதற்குப் பிறகு அவற்றை செரிப்பதற்கேற்ற ஆற்றலை உங்கள் உடல் இழந்து விடுகிறது.

தொடர்ந்து பால் சாப்பிட்டுக் கொண்டே இருப்பவர்கள், தயிர் அதிகமாக சாப்பிடுபவர்கள் ஒருவித மந்தமான நிலையில் இருப்பார்கள். எனவே இவற்றையெல்லாம் அனுபவப்பூர்வமாகப் பார்த்து, எந்த உணவு வகைகள் உங்களை விழிப்புணர்வோடு வைத்திருக்கின்றன. எந்த உணவு வகைகள் சுறுசுறுப்பாக வைத்திருக்கின்றன என்பதை நீங்களே தெரிந்து கொண்டு சாப்பிட வேண்டும்.

அமெரிக்க நாடுகளுக்கு நீங்கள் போனால், "மூன்றாவது கோப்பையை மறந்து விடாதீர்கள்" என்ற விளம்பரத்தை நீங்கள் பார்ப்பீர்கள். என்ன சொல்லுகிறார்கள், "எப்படியும் 2 கோப்பை பால் சாப்பிட்டு விடுவீர்கள். ஆனால் 3வது கோப்பை பால் சாப்பிட வேண்டும். அதை மறந்து விடாதீர்கள்" என்பது அந்த விளம்பரத்தின் பொருள். எனவே, பால் சாப்பிடுவது உங்களை சுறுசுறுப்பாக வைததிருக்கிறதா அல்லது மந்தமாக வைத்திருக்கிறதா என்பதை நீங்கள் கண்டுணர வேண்டும். வயிற்றுப் போக்குக்கு பால் ஒரு நல்ல மருந்து என்று சொல்லுவார்கள். மருந்துதான். அந்த மருந்தே உணவாகிவிடாது.

உறக்கத்தில் மாற்றம் ஏற்படுத்தும் உணவு

பொதுவாக, நீங்கள் உட்கொள்ளும் இயற்கை உணவின் அளவு கூடக்கூட நீங்கள் உறங்குகிற நேரத்தின் அளவும் குறைந்து கொண்டே வரும். அதிக உறக்கம் என்பது நீங்கள் போதிய சக்தியில்லாமல் இருக்கிறீர்கள் என்பதற்கு அடையாளம். சிலபேர் 8 மணி நேரம் 10 மணி நேரம் உறங்குகிறார்கள். அவர்களுக்கு அவ்வளவு ஓய்வு தேவை என்பது பொருளல்ல. அவ்வளவு தூரம் சக்தியிழந்து இருக்கிறார்கள் என்பதுதான் அர்த்தம்.

சிறிய செயல் செய்தாலும் உடனே தூக்கம் வருகிறதென்றால், போதிய சக்தி நிலை உடலில் இல்லை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். ஆரோக்கியமான மனிதருக்கு 3 லிருந்து 4 மணி நேர உறக்கமே போதிய ஓய்வைத் தந்துவிடும். இயற்கை உணவுக்கு மாறுகிறபோதும், தியானம் புரிகிறபோதும் இயல்பாகவே உறங்கும் நேரம் குறைந்துவிடும். மனித உடலை அதற்குரிய நிலையில் வைத்திராமல், பொருளியலுக்கோ, ஆன்மீகத்திற்கோ மேற்கொள்கிற எந்த முயற்சியிலும் வெற்றி பெற இயலாது.

உணவும் உணர்வும்!

உணவுக்கும், உணர்வுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதைப் புரிந்து கொள்ளுங்கள். உங்களை உற்சாகமாக வைத்திருக்கக்கூடிய உணவு வகைகளை மட்டுமே உட்கொள்ளுங்கள். சரியான விகிதத்தில் இயற்கை உணவை சேர்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் சாப்பிடுகிற உணவு, உங்களுக்கு சக்தியை தருவதாக, செயல்களில் ஈடுபட உற்சாகத்தையும், உத்வேகத்தையும் தருவதாக இருக்கிறதா என்பதை கண்காணித்துக் கொள்ளுங்கள். இதுவும் ஒரு விழிப்புணர்வை பெறுவதற்கான அணுகுமுறைதான். நான் சொல்வது உணவுமுறை பற்றிய போதனை அல்ல. உணர்வு பற்றிய விழிப்புணர்வை நீங்கள் பெறுகிற வழி.

# மூதுரை



**படித்து அறிந்தவர்**

கல்லாத மாந்தர்க்குக் கற்றுணர்ந்தார் சொற்கூற்றம்
அல்லாத மாந்தர்க் கறங்கூற்றம் - மெல்லிய
வாழைக்குத் தானீன்ற காய்கூற்றம் கூற்றமே
இல்லிற் கிசைந்தொழுகாப் பெண்.

**படிக்காத மக்களுக்குப் படித்து அறிந்தவர்களின் சொல்லானது எமன் போன்றதாகும். நேர்வழி வாழாதவர்க்கு தரும தேவதையே எமனாகும். மென்மையான வாழை மரத்திற்கு தான் பெற்ற காயே எமனாகும். இல்லத்தில் பொருந்தி வாழாத பெண்ணுக்கு அப்பெண்ணே அவளுக்கு எமனாவாள்.**

**(கருத்து - மூடர்களுக்கு அறிஞர்கள் சொல் துன்பத்தைத் தரும். பாவிகளுக்கு அறமே துன்பத்தைத் தரும். வாழைக்கு அதன் காயே துன்பத்தைத் தரும். வீட்டிற்கு அடங்கி நடக்காத பெண் துன்பமடைவாள் என்பதாம்)**

# ஈழத்தில் அமையும் திருவாசக அரண்மனை

செந்தமிழ்ச் சொல்லருவி சலலீசன்

ஈழத்தில் அமையும் திருவாசக அரண்மனை 24.06.2018 ஞாயிற்றுக்கிழமை திறப்புவிழாக் கண்டது.

திருமூலரால் (சிவபூமி) என்று சிறப்பிக்கப்பட்ட ஈழமணித் திருநாட்டில் இன்று திருவாசகத்துகென ஓர் அரண்மனை கட்டி எழுப்பப்படடிருக்கிறது.

நெஞ்சம் நெகிழ்வுடன் வாழ்த்துரைக்கின்றோம் இந்த அற்புத திருவாசக அரண்மனை அமைய பணியாற்றிய அத்துணை அன்பு நெஞ்சங்கள் திருவடிகள் பணிகின்றோம்.

யாழ்மண் திருவாசகத்தை உயிர்ப்புடன் பேணும் மண்ணென்றால் மிகைப்படாது. மார்கழியில் திருமுறைக் காப்பிட்டு திருவாசகப் பாக்களை ஓதும் வழக்கமாயினும் சரி, நீத்தார் சடங்குகளில் திருப்பொற்சுண்ணத்தைப் படிக்கும் மரபாயினும் சரி ஆலயங்களில் மடங்களில் திருவாசக முற்றோதலை மேற்கொள்வதானாலும் சரி திருவாசகத்துக்கு முதன்மை வழங்கும் நடைமுறை இன்றும் தொடர்ச்சியுற்றுள்ளது. இந்நிலையில் செஞ் சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் அமைத்த திருவாசக அரண்மனை "திருவாசகம் என்றால் யாழ்ப்பாணம்" என்ற உயர் தகுதிப்பாட்டை எம்மவர்க்கு வழங்கியுள்ளது.

இனறு 24 6 18 திறப்பு விழாவும் நாளை குடமுழுக்கு விழாவும் நடைபெறவுள்ளன.

அவுஸ்திரேலியா சிட்னியில் வாழும் இதய வயித்திய நிபுணர் மனமோகன், சிவஜோளி தம்பதியரின் உபயமாகக் கிடைத்த காணியில் அவர்களின் உபயமாக அமைக்கப்பட்ட கோயில் உயர்ந்து நிற்கிறது. கோயிலில் மூலவராகத் தட்சணாமூர்த்தி, அவர் முன்னால் நந்தியெம்பெருமான் அதற்கும் முன்னால் கற்றேர். அதில் சிவலிங்கத்துடன் மணிவாசகர் என அரண்மனை அழகுற அமைக்கப்பட்டுள்ளது. கோயிலின் கிழக்கு மேற்குப் புறங்களில் 656 திருவாசகப் பாடல்களும் கருங்கல்லில் மனித வலுவினால் உளிகொண்டு செதுக்கப்பட்டுள்ளன.

ஈழத்து இந்து சமய வளர்ச்சியில் நாவற்குழி மண் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் புண்ணிய பூமியாகும். சுவாமி விவேகானந்தர் யாழ்ப்பாணத்துக்கு வந்தபோது அவரை நாவற்குழியிலிருந்து பெரும் ஊர்வலமாக அழைத்துச் சென்றார்களாம். அவர் அங்கிருந்து குதிரைகளி பூட்டப்பட்ட தேரில் பவனியாக யாழ்ப்பாணம் அழைத்து செல்லப்பட்டார் என்கின்றனர்.

யாழ்ப்பாணத்தவரின் உணவுக் களஞ்சியமும் நாவநற்குழியிலேயே அமைந்திருந்தது. போர்ச் சூழலில் இதன் அருமை பலராலும் உணரப்பட்டது. இந்த உணவுக் களஞ்சியத்துக்கு முன்பாகவே கோயில் வளாகம் அமைந்துள்ளது.

சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகள் அவர்கள் சொற்பொழிவு ஒன்றுக்காக மூன்றாண்டுகளுக்கு முன்னர் திருவண்ணாமலை சென்றபோதே இக்கரு உதமானது.

திருமந்திரமும் திருவாசகமும் என்ற பொருளில் அவர் உரையாற்றியபோது அங்கிருந்த ஒரு சித்தர் திருமுருகனாரை ஆசீர்வதித்து "திருவாசகத்தை யாழ்ப்பாணத்தில் நீ காப்பாற்றுவாய். காற்று மழை நெருப்பு என எவையும் தீண்டாத வண்ணம் அதைப் பாதுகாக்கக் கூடிய பணியை மேற்கொள்ளக்கடவாய்." என்றாராம்.

டிஜிற்றல் யுகத்தில் திருவாசகத்தைக் காப்பாற்ற இணையம் உள்ளதுதானே

எனப் பலரும் நம்பிக்கை கொண்டுள்ள நிலையில் எக்காலத்திலும் அழியாத ஒரு வடிவில் திருவாசகத்தைப் பேணும் முயற்சியாக திருவாசக அரண்மனை அமைக்கும் ஆணை மறைபொருளாக அந்தச் சித்தராலேயே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. பல நற்பணிகளை இன்று அம்மண்ணில் முன்னெடுக்கும் சிவபூமி அறக்கட்டளையின் வாயிலாக இப்பணி நடந்தேறியுள்ளது.

விமானம் உயர்ந்த கலைக்கொயில் மூலவராக தட்சிணாமூர்த்தி

சோழர்காலக் கட்டடக் கலைக்கு ஒப்பாக தஞ்சைப் பெருங்கொயிலை நினைவுறுத்தும் வகையில் முப்பதடி உயரத்தில் விமானம் நிமிர்ந்து நிற்கின்றது. அதில் சிவலிங்கங்கள் பதிக்கப்பட்டுள்ளன. இலங்கையில் கருவறையில் தட்சிணாமூர்த்தி குடிகொள்ளும் முதற்கோயிலும் இதுதான். கருங்கல்லில் நான்கரை அடி உயரமுள்ளவராக இந்த ஞானகாரகன் விளங்குகிறார். விமானத்தில் சிவலிங்கங்கள் அமைக்கப்டப்ட கோயிற் சிறப்பம் இங்குள்ள தனித்தவங்களில் ஒன்று எனலாம். ஊரெழு சண்முகநாதனின் கைவண்ணமம் தென்னிந்திய சிற்பக் கலைஞர் புருசோத்தமனின் கலை வண்ணமும் திருமுருகனாரின் சிந்தனைகளுக்குச் செயல்வடிவம் கொடுத்துள்ளன. இதைவிட நல்லுள்ளம் படைத்த சான்றோர் பலர் நிதி வழங்கி இக்காரியம் செயற்பட உதவியுள்ளனர். ஏறத்தாழ நானூறு இலட்சம் ரூபா மதிப்பில் பணிகள் இடம்பெற்றதாக மதிப்பிட முடிகின்றது. கோயிலின் உட்பிராகரத்தில் கிழக்கு மேற்கு சுவர்களில் 656 திருவாசகப் பாடல்களும் கருங்கற்களில் கைகளாற் செதுக்கப்பட்டுளளன. பாரதிபுரத்தைச் செர்ந்த 29 வயது இளைஜரான விநோத் என்ற கலைஞர் இந்த வரலாற்றுப் பணியைச் செய்துள்ளர். புகழுடற் சின்னங்களில் தன் கைவீனையை வெளிப்படுத்திய தேர்ச்சி மிக்கவர். இன்று பக்தி சார்ந்த வரலாற்றுப் பணியை மேற்கொண்டு பெருமைபெற்றுள்ளார். இதைவிட கிழக்கு மேற்கு உட்பிரகாரத்தில் 108 சிவலிங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதன்மேல் 108 மணிகளும் காணப்படுகின்றன. அடியவர்கள் தங்கள் விருப்பப்படி அபிகித்து ஆனந்திக்கக்கூடிய வாய்ப்பு ஏற்படுத்தப்படவுள்ளது எனத் தெரியவருகினறது.

இதைவிட வாயிலில் சிவபுராணத்தை கிரந்தம், சீனம், தங்கோலோ, சிங்களம் முதலிய பன்னிரண்டு மொழிகளில் மொழிபெயர்த்து 30அடி நீளச் சுவரில் அமைத்துள்ளனர். கோயிலில் எவ்வேளையும் திருவாசகம் ஒலித்துக்கொணடிருக்கும் ஒலிப்பொறி முறையையும் ஏற்படுத்தியுள்ளனர். அத்துடன் திருவாசக ஆராய்ச்சி நூல் நிலையம், யாத்திரிகர் தங்கும் அறை, பூசகர் அறை, களஞ் சிய சாலை, பாகசாலை எனக் கோயிலுக்குரிய இதர அம்சங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

சைவாபிமானிகளின் பெருங் கனவொன்று நனவாகி இருக்கின்றது. உலக நாடுகளில் பைபிளை வெள்ளைக் கற்களிற் பதித்துள்ளனர். திருக்குரானை, மகாபாரதத்தை கற்களில் எழுதிப் பதீவ செய்துள்ளதாகக் கூறுகின்றனர் சைவ பக்தி இலக்கியமாகிய திருவாசகத்தைக் கற்றகளில் எடுதிய சாதனை யாழ்ப்பாணத்திலேயே நிகழ்ந்திருக்கின்றது. இதனை எமது இளஞ் சந்ததியினர் அவசியம் பார்வையிட்டுப்ப யன்பெற வேண்டும். பாடசாலை அதிபர்கள் பெற்நோர்கள் இத் தெய்வத்திருப்பணியைத் தமது பிள்ளைகளுக்கு உணரவைக்கவேண்டும்இ எங்களிடம் ஈரக்கின்ற இந்து அமைப்புக்கள் பஜனைக் குழுவினர் வருடம் முழுவதும் திருவாச முற்றோதல் மேற்கொள்ளக்கூடிய நியமத்தை ஏற்படுத்த வேண்டும்.

இலங்கை சிவபூமி என்பதை மெய்ப்பிக்கும் காரியம் ஒன்று திருமுருகானர் வாயிலாக நிறைவேற்றியிருக்கின்னறது. தெய்வம் அவருள் நின்று இயக்கி இருக்கினறது என்றால் மிகைப்படாது. ஒரு தெய்வத் திருப்ணியை நிறைவேற்றிய அவருக்கு நன்றி உரைக்க வார்த்தைகள் இல்லை.


நன்றி..

இலங்கை அன்பர்

கேசினி கோணேஸ்வரன் அவர்களுக்கும், கலைகேசரி இணையத்துக்கும்

# ஆன்மிகவாதிகளுக்கு
# அரிய சந்தர்ப்பம்

*தமிழ்நாட்டில் உள்ள கோயில்களில் திருவிழா காலங்களில் சுவாமியை தரிசிக்கும் வாய்ப்பை நீங்கள் அடைய வேண்டுமா?*



## திருவிழா - சுற்றுலா

மார்கழி மாதம் 6ஆம் திகதி புறப்பட்டு மார்கழி 16ஆம் திகதி வரையிலான திருவிழா சுற்றுலா - திருவண்ணாமலையும் - அத்துடன் ஆறுபடை முருகன் கோவில்கள், மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவில் தரிசனமும் குறிப்பிட்ட இருக்கைகள் உள்ளதால் உங்கள் இருக்கையை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.



# அய்யன் திருவள்ளுவர் தமிழ் மன்றம்

## வழங்கும்

## மாதம் இரண்டு திருக்குறள்

கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டிவ் வுலகு.

இந்த உலகம்,
அன்பும் இரக்கமும்
இணைந்த கண்ணோட்டம்
எனப்படுகிற பெரும் அழகைக் கொண்டவர்கள்
இருப்பதால்தான் பெருமை அடைகிறது.

கண்ணோட்டத் துள்ளது உலகியல் அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை.

அன்புடன் அரவணைத்து
இரக்கம் காட்டும் கண்ணோட்டம்
எனப்படும் உலகியலுக்கு,
மாறாக இருப்பவர்கள்
இந்தப் பூமிக்குச் சுமையாவார்கள்.




இந்தத் திருக்குறள் நூலை லண்டனில் பெற
தமிழர் தகவல் இதழைத் தொடர்புக்கொள்ளுங்கள்
**விலை. 2 பவுண்ட் மட்டும்**



Happy Akshaya Tritiya

லூசியத்தில் தரமான நகைக்கடை

# தினேஷ்

ஜுவல்லரி டெக்ஸ்டைல்ஸ்

# Thinesh

**Jewellers & Textiles**

**276, Lewisham High Street**
**Lewisham**
**London SE 13, 6JZ**
**Tel : 020 8613 9569**
**www.thinesh-jt.com**

*லூசியத்தில் முதலாவது தமிழ்க்கடை*

# கற்பகம்


**தங்கள் சேவையை விரிவாக்கியுள்ளார்கள்**

# KATPAKAM

உடன் காய்கறிகள், பழ வகைகள்
உடன் பங்கு இறைச்சி
தமிழ் ஆடியோ, வீடியோ தமிழ்படங்கள்
அனைத்தும்ஒரே இடத்தில்




36, Loampit Hill Lewisham
London SE 13 7SW
**Tel : 208 694 88 10**


Best Food
11-13 Ealing Road Wembley
Middlesex HAO 4AA Tel : 0208 9000100
364 - 366, Bath Road, Hounslow Middlesex TW4 7HT
Tel : 020 8577 6002, Fax : 020 8570 2323
259 - 261, London Road West Croydon Surrey CRO 2RL
Tel : 020 8684 6269, Fax : 684 4677
எங்கள் வியாபார நிலையத்தில் ஒவ்வொருமாதமும் அதிரடி மலிவு விற்பனையாக
பல பொருட்களை மக்களுக்கு விற்பனை செய்கிறோம்.
ஒவ்வொரு மாதமும் எங்கள் கிளைகளுக்குச் சென்று
மலிவு விலை பொருட்களை பெற்றுக்கொண்டு கணிசமான பணத்தை சேமியுங்கள்

தானாக உயர்வதுதான்
வயது
விடாமல் துரத்துவதுதான்
காலம்
தடுக்கமுடியாததுதான்
நேரம்
கடக்கத் துடிப்பதுதான்
இளமை
தொடவேண்டியதுதான்
இலக்கு

இத்தனையும் தான்
**வாழ்க்கை**


எவரஸ்ட்
24 Loampit Hill
Lewisham SE13 7SW
Tel : 020 8691 2233
அசத்தலான
அசைவ சுவைக்கு

Breakfast Lunch Dinner

Anthoorium
World of Designs
Jewellery
&
Textiles

102, B Burlington Road
New Malden
Surrey KT3 4NT
Tel : 020 8942 8001
Fax : 020 8942 8007
Web : www.anthoorium.co.uk
Email : sales@anthoorium.co.uk



செல்வராஜா கோல்ட் ஹவுஸ் &
டெக்ஸ்டைல்ஸ்
SELVARAJA GOLD HOUSE & TEXTILES
£ 300க்கு மேல்
நகை வாங்குவோருக்கு
லட்சுமி தங்கக் காசு
இலவசம்
❖ உங்களிடம் இருக்கும் பழைய தங்கத்திற்கு அதிகூடிய விலையில் உடன் பணம்.
❖ சொற்ப கூலியை மட்டுமே செலுத்தி புதிய நகைகளை பெற்றுக்கொள்ளலாம்.
❖ எங்களிடம் தாலிக்கொடி செய்பவர்களுக்கு கூறைப்புடவைகள், பட்டுப் புடவைகள் 50% விலைக்கழிவில்.
❖ புதிதாக ஆரப்பிக்கப்பட உள்ள சீட்டுத் திட்டத்தில் இணைந்து நீங்களும் ஓர் அதிர்ஷ்டசாலி ஆகுங்கள்.
162 B Mitcham Road London SW17 9NJ
Tel : 208 767 3795 Mobile : 078 25005269

Ilford பகுதியில் புதிய பல்பொருள் அங்காடி

# SRI STORE

இது காலமும் SRI FOOD & WINE
என்ற பெயரில் இயங்கிய எமது கடை
புதிய பெயரில் தொடர்ந்து தங்கள் சேவைக்காக

**396-400 Ilford Lane**
**Town Centre Ilford, IG1 2NB**
**Tel : 020 8553 7737**



# SUN MOTORS



Mechanical / Body Repairs /
Recovery / Tyres

**Tel : 02086920232**

R/O 26 Loampit Hill
Elswick Road, Lewisham
London, SE 13, 7SW

## லண்டனில் 35 வருடமாக இறக்குமதியாகும் தமிழர் உணவு வகைகள்

லீலா

தயாரிப்புகள்

*உற்பத்தியில் பெருமை, உபயோகிப்பதில் ஆனந்தம்*

புலம்பெயர்ந்த ஈழ மக்கள் இலண்டனுக்கு வந்த காலம் தொட்டு இன்று வரைக்கும்
தொடர்ந்து இலண்டனில் விற்பனையாகும் லீலா தயாரிப்புகள்.

# Vaani Foods

லண்டன் ஏக விநியோகஸ்தர்கள்

தொலைபேசி இலக்கம்
**0208 668 7648**

# SURYAA

CURRY LEAVES | CINNAMON | 4 TYPES OF CHILLIES

PEPPER | CUMIN | TURMERIC | FENUGREEK | FENNEL

FENNEL | CLOVE | RAMPE | CORIANDER




BEST SELLER

MILD

HOT

EXTRA HOT

- 500g
- 900g
- 3 Kg




சென்னை : ஃபோரம் விஜயா மால், வடபழனி • ஃபீனிக்ஸ் மார்கெட் சிட்டி, வேளச்சேரி • பனகல் பார்க், தி. நகர்.
திருநெல்வேலி : வண்ணார்பேட்டை • வடக்கு ரத வீதி, திருநெல்வேலி டவுண்.
கோயம்புத்தூர் : ப்ரூக்ஃபீல்ட்ஸ், ப்ரூக்பாண்ட் ரோடு | பெங்களூரு : ஒரையன் மால், ராஜாஜி நகர்.

toll free no.: 1800 425 3105 shop online at: www.rmkv.com write us at: bonus@rmkv.com follow us on /rmkvsilks

# கணேஷா தமிழ் கடை

## Ganesha Asian Supermarket

433 Bromley Road Downham BRI 4PH

**020 8698 0990**

Lewisham, Catford
Downham, Bromley
வாழ் மக்களுக்கு
ஒரு
புதிய உதயம்


- இலங்கை இந்திய உணவுப் பொருட்கள்
- மளிகைப் பொருட்கள்
- மரக்கறிகள் பழங்கள்
- உடன் மீன் இறைச்சி வகைகள்
- குடிபானங்கள்
- வீட்டு உபயோகப் பொருட்கள்
- பூஜைப் பொருட்கள்



**அனைத்தையும் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்**

விசேட விலைச்சலுகையில் ஏராளமான பொருட்கள்
இன்றே விரையுங்கள்

177




தரமான தங்கத்துக்கு லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்

லட்சுமி ஜுவலர்ஸ்

276 High Street North London E12 6SA UK

Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448

எங்களுக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை